www.tamilarangam.net

# பெரியார்?



அ.மார்க்ஸ்

அடையாளம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெரியார்?

பெரியாரின் கண்டுக்கொள்ளப்படாத
சிந்தனைகளின் மீதான ஒரு கவன ஈர்ப்பு

அ. மார்க்ஸ்

SEELAN BOOKS
NORWAY
SIGNATURE ..............

அடையாளம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Price: I Rs. 30

**PERIYAR? (Tamil)**

A critical study of Periyar E.V. Ramasamy O Author A. Marx O © A. Marx O First Edition April 2001 O Pages : 68 O Typeset by : Replika, Chennai 4 O Published by : ADAIYALAM, H 15/193, II Floor, Karupur Road, Puthanatham 621310 Ph. 04332 73444, email: adaiyalam@yahoo.com O Sole Distributros in Sri Lanka : MOONDRAVATHU MANITHAN, 37/14, Vauxhall Lane, Colombo 2. Ph. 302759, email : 3man@sltnet.lk O Cover Photo : Sivakumar O Cover design : Sasi & Sasi O Printed by : Multicraft, Chennai 4.

ISBN 81 7720 005 4

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செந்தாரைகை
ஆசிரியர் குழுவில் பணியாற்றிய
இனிய நினைவுகளோடு
பேரா.சே.கோச்சடை எம்.எஸ்.சி., எம்.பில்.,
கவிஞர் பழமலய்
இருவருக்கும்

www.tamilarangam.net

www.tamilarangam.net

# அடையாளம்

பெரியாரின் ஆதரவாளர்களும் எதிர்ப்பாளர்களும் பெரியார் குறித்த ஒரே மாதிரியான பிம்பத்தையே கட்டமைக்கின்றனர். நாத்திகர், பார்ப்பன எதிர்ப்பாளர், இட ஒதுக்கீட்டிற்காகவும் தனி நாட்டிற்காகவும் போராடியவர், பெண் விடுதலை குறித்து அக்கறை காட்டியவர் என்பவைதான் இந்த பிம்பத்தின் மூலம் வெளிப்படும் பெரியாரின் பரிமாணங்கள். விவாதங்களும் சர்ச்சைகளும் இந்த அம்சங்களில் பெரியார் எந்த அளவிற்குச் சரியாக இருந்தார் அல்லது இல்லை என்கிற எல்லைகளுக்கு உள்ளேயே சுருங்கியுள்ளன.

ஏறக்குறைய ஓர் அரை நூற்றாண்டு காலம் தமிழ்ச் சூழலில் தீவிரமாக இயங்கி வந்த பெரியாரின் சிந்தனைகளையும் செயல்பாடுகளையும் பின்னோக்கிப் பார்க்கும் போது அவரை அவ்வளவு எளிதாக மேற்குறித்த அம்சங்களுக்குள் சிறைப் படுத்த முடியாது என்பது வெளிப்படும். எந்தவொரு அள வுகோலாலும் அவரை முழுமையாக வரையறுத்துவிட இயலாது திணறுவதை நாம் காண முடியும். இந்த வரைய றையின் பிடியில் அகப்படாமல் திமிறி வெளிப்படும் அவரு டைய பரிமாணங்கள் இன்றையச் சூழ்நிலையில் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன.

பழைய கேள்விகளுக்குப் புதிய பதில்களைத் தேடுகிற முயற்சியில் இந்தப் புதிய பரிமாணங்களை அடையாளம் காண முடியாது. கேள்விகளையே மாற்றிப் போடுவதன் மூலமே அதைச் செய்ய முடியும். அப்படியொரு முயற்சியை 1993இல் தொடங்கி 'நிறப்பிரிகை' இதழ் செய்து வருகிறது; பெரியாரின் எதிர்க்கலாச்சார சிந்தனைகள் அவ்வப்போது இவ் இதழில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

www.tamilarangam.net

இக்குறுநூல் பெரியாரின் விடுதலை பற்றிய சிந்தனையை ஆய்வுக்கு உட்படுத்துகிறது. தன்னை ஒரு படிப்பாளியாகவும் தத்துவவாதியாகவும் காட்டிக்கொண்டவர் அல்லர் பெரியார். ஆனாலும் எப்படிப் பெண் விடுதலைச் சிந்தனைகளில் நவீன கருத்துக்களை எல்லாம் விஞ்சக்கூடிய பார்வையை அவர் கொண்டுள்ளாரோ அதுபோலவே தத்துவச் சிந்தனைகளிலும் மிக நவீனமான பார்வை கொண்டுள்ளதை இந்நூல் வெளிப்படுத்துகிறது. சுயத்தை உறுதி செய்தல் என்கிற தத்துவ வெளிப்பாடு பெரியார் சிந்தனைகளில் தெறித்து வெளிப் படுவதை அ.மார்க்ஸ் தொட்டுக் காட்டுவது பெரியாரியலுக்கு ஒரு முக்கிய பங்களிப்பாக அமையும் என நம்புகிறோம்.

அரசியலாலும் கலாச்சாரத்தாலும் ஒடுக்கப்படும் மக்களின் பண்பாட்டுக் கூறுகளைப் பதிவு செய்யும் அடையாளம், பெரியாரியலுக்கு புதிய வெளிச்சம் தரும் இந்நூலை தனது ஆறாம் வெளியீடாக வாசகர்களின் முன்வைத்து விமர்சனங் களை எதிர்ப்பார்க்கிறது.

இவ்விமர்சன நூலை எழுதி வெளியீட்டு உரிமை வழங்கிய பேராசிரியர் அ.மார்க்ஸ் அவர்களுக்கும் இந்நூல் உருவாக்கத் தில் பங்களித்த கவிஞர்கள் தண்ணன், நிலவன் ஆகியோருக்கும் முன்னுரை எழுதிய தோழர்கள் நீலகண்கடன், இராசேந்திரன் ஆகியோருக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகி றோம்.

புத்தாநத்தம் — மு. சாதிக்

*20.04.2001*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முன்னுரை

இந்து பார்ப்பன கலாச்சாரத்திற்கு எதிராக மானுட விடுதலைக்காகக் களம் கண்டவர் பெரியார். அந்தக் களத்தில் இந்துக் கலாச்சார மதிப்பீடுகளையும் புனித ஒழுக்கக் கட்டு மானங்களையும் உடைத்தெறிந்தவர் அவர். பெரியாரால் கேள்விக்கு உள்ளாக்கப்பட்ட இந்துத்துவம் இன்று புதிய வேகத்துடன் பாசிச சக்தியாக வளர்ந்து வருகிறது.

இச்சூழலில் பெரியாரின் பரிணாமச் செழுமையுடன் பெரியாரிஸ்ட்டுகளாகிய நாம் எதிர் நடவடிக்கையாய் பாபர் மசூதி இடிப்பின் போது சங்கர மட இடிப்பையும் சர்ச்சுகளும் பைபிள்களும் கொளுத்தப்படும்போது பார்ப்பனக் கோயில் கள், வேதங்களின் அழித்தொழிப்பையும் கோவையில் இஸ்லாமியர் கடும் மத வன்முறைக்கு உள்ளான போது பார்ப்பன அரச பயங்கரவாதத்திற்கு எதிரான மக்கள் அணி திரட்டலையும் நிகழ்த்திக் காட்டியிருக்க வேண்டும்; தீண்டாமைக்கு எதிராகவும் நம் சக்திகளை குவித்திருக்க வேண்டும். ஆனால் நாம் அதற்கான வலுத்திறனை இழந்து நிற்கிறோம்.

கற்பு, தேசியம், ஒழுக்கம், சாதி, மதம், கடவுள் என்று புனிதமாகக் கட்டமைக்கப்பட்டிருந்த அனைத்தையும் பல்லாயிரக்கணக்கான 'மக்கள் என்ன நினைப்பார்களோ' என்று கவலைப்படாமல் போட்டு உடைத்த பெரியாரை நாம் அதே நிர்வாணத்தோடு காட்டத் தவறிவிட்டோம்; எதார்த்த மீறல்கள் என நிராகரித்து விட்டோம். ஆனால் அதே வேளையில் சாதி மத ஒழிப்பிற்காகவும் பெண் விடுதலைக் காகவும் சமூகம் ஒன்றைக் காணும் நோக்குடன் பெரியார் கோரிய 'தனித் தமிழ் நாடு' என்பதை சிலர் வெற்றுத் 'தமிழ்

www.tamilarangam.net

தேசியமாக' அவருக்கு எதிரான தன்மைகளுடன் உருவகப் படுத்தி வருகிற சூழலையும் நாம் காண நேரிடுகிறது.

மத, தேசிய மையங்களின் ஒழுக்க மதிப்பீடுகளுக்குள் உள் ஒடுங்கி வராமல் அவற்றைச் சிதைத்தும் உடைத்தும் வாழ்கின்ற விளிம்புநிலை மக்களான பாலியல் தொழிலாளர் கள், அரவாணிகள் இவர்களிடமெல்லாம் பெரியாரைச் சேர்த்தாக வேண்டிய காலச் சூழலில் இந்நூல் வெளி வருவது மிக்கவும் பொருத்தமானதாகும்.

பெரியாரின் மறைக்கப்பட்ட பரிமாணத்தை வெளிக் கொணர்கின்ற இந்நூலை தோழர் அ. மார்க்ஸ் அக்கறை யோடு எழுதியுள்ளார். தம்மால் உட்செரித்துக்கொள்ள முடியாத வற்றைப் பின்நவீனத்துவ எழுத்து என்று ஒதுக்கி விடுகிற போக்கு இங்கு நிகழ்கிறது. இதையும் அப்படிச் செய்து விடாமல் ஆரோக்கியமான விவாதத்திற்கு பெரியாரிஸ்ட்டு களாகிய நாம் தயாராக வேண்டும்.

தனித்துவத்துடன் மிளிரும் இந்நூலை எழுதிய அ.மார்க்ஸ் அவர்களையும் சிறப்பாக வெளியிடும் அடையாளம் தோழர் களையும் மனதாரப் பாராட்டுகிறோம்.

சென்னை
*18.04.2001*

**நீலகண்டன்,**
**இராசேந்திரன்**

www.tamilarangam.net

# 1

# ஒதுக்கப்படும் பெரியாரும் ஓரங்கட்டப்படும் அவர் சிந்தனைகளும்

பெரியார் சிந்தனை மீதான சர்ச்சைகளும் பெரியார் மீதான தாக்குதல்களும் தொடர்கின்றன. பெரியாரின் சிந்தனைகளும் செயற்பாடுகளும் இன்னும் எதிர் கொள்ளப்பட வேண்டியவை களாகத் திகழ்ந்து கொண்டிருப்பதற்கான சாட்சியங்களாக ஒரு வகையில் அமைகின்றன. தாக்குகிறவர்களுக்குப் பெரியாரின் சிந்தனைகள் ஏதோ ஒரு வகையில் இன்று இடராக இருப்ப தையும் நாம் விளங்கிக்கொள்ள இயல்கிறது.

தாக்குதல்களுக்கும் எழுப்பப்படுகிற சர்ச்சைகளுக்கும் பெரியாரின் ஆய்வாளர்களும் இதர பெரியாரிஸ்டுகளும் உடனுக்குடன் பதிலளித்து வருகின்றனர். பெரியார் 'மரபி'ல் எந்தவிதத் 'திரிபு'ம் ஏற்பட்டுவிடாதபடிக்கு இவர்கள் ரொம்பவும் விழிப்புடன் இருக்கின்றனர். எழுப்பப்படும் கேள்விகளும் தொடுக்கப்படும் தாக்குதல்களும் பல சந்தர்ப் பங்களில் அபத்தமாக இருக்கின்றன என்பதில் அய்ய மில்லை. ஆனால் இந்தக் கேள்விகளையும் தாக்குதல்களையும் காட்டிலும் அளிக்கப்படுகிற 'பதில்'களும் இவைகளினூடாகக் கட்டமைக்கப்படும் 'பெரியார் மரபு'ம் மிகவும் அயர்ச்சியளிக் கின்றன. பெரியார் குறித்து ஏற்கனவே கட்டமைக்கப்பட்டுள்ள பிம்பங்களில் எந்தச் சிதைவையும் ஏற்படுத்தாதவைகளாகவும், புதிய சிந்தனை உசுப்பல்களுக்குக் கிஞ்சித்தும் வாய்ப்பளிக் காதவையாகவும் இவ்விவாதங்கள் அமைகின்றன.

இதனூடாக, பெரியார் குறித்து ஏற்கனவே கட்டிக் காக்கப்பட்ட மவுனங்கள் தொடர்கின்றன. ஒரு எடுத்துக்காட்டு: தமிழைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'காட்டுமிராண்டி மொழி எனப் பெரியார் சொன்னது ஏதோ ஒரு கோபத்தில், வேகத்தில், போகிற போக்கில் சொல்லப்பட்ட கருத்து அல்ல. கடைசி வரை அதனை அவர் வலியுறுத்தி வந்தார். இது குறித்துப் பின்னர் கேள்விகள் கேட்கப்பட்ட போது அவர் விளக்கம் சொல்லத் தயங்கவில்லை. 'கலை மகள்' 'மாலை முரசு' ஆகிய இதழ்களுக்காக அவரிடம் நேர் காணல்கள் எடுக்கப்பட்ட போதும் அவர் தமது நிலைப் பாட்டில் நின்று விளக்குவதைக் காணலாம். (ஆனை முத்து தொகுத்துள்ள 'பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்' பக்:1228, 1231. இனி ஆ.தொ எனக் குறிக்கப்படும்). ஆனால், இதை ஒரு சொல்லாடல் என்கிற அளவில் தமிழ்ச் சூழலில் வலம் வர அனுமதிக்காத வரலாறு கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. 'பெரியாரை இந்த விசயத்தில் நாம் மறுத்துப் பேசக் கூடாது; பேசினால் அவர் இன்னும் அதிகமாகப் பேசத் தொடங்கி விடுவார்' என்கிற ரீதியில் நகைச்சுவை (!) பேசி இந்தக் கருத்தை அவரது தி.மு.க. வாரிசுகள் ஓரங்கட்டியது சிந்திக்கத் தக்கது. இன்றைய பெரியாரியல் ஆய்வாளர்களும் பெரியா ரிஸ்டுகளும் மவுனம் காக்கும் புள்ளிகளில் ஒன்றாக இதுவும் - தமிழ் காட்டுமிராண்டி மொழி என்னும் கூற்றும் - உள்ளது கவனத்திற்குரியது.

திட்டமிட்டு மவுனமாக்கப்படும் பெரியாரின் இதர சிந்தனை களில் சில:

- தமிழ் காட்டுமிராண்டி மொழி, தமிழ் இலக்கியங்கள் உதவாக்கரை, சாதி காப்பாற்றுபவை.
- மொழி இயற்கையானதல்ல; தேசம் ஒரு கற்பனை; தேசாபிமானம் அயோக்கியத்தனம்; வியாபாரம்.
- நான் ஒரு தேசாபிமானி அல்ல(ன்), தேசத் துரோகி.
- மதப்பற்று, சாதிப்பற்று, மொழிப்பற்று, நாட்டுப்பற்று தேவையில்லை.

www.tamilarangam.net

- ஆண்மை அழியாமல் பெண்மைக்கு விடுதலை இல்லை.
- கணவன் இருக்க வேறொரு ஆடவரை நினைப்பது குற்றமாகக் கருதப்படக் கூடாது.
- பொது நலம், தியாகம் .... என்பதெல்லாம் பொருளற்ற சொற்கள்; பித்தலாட்டங்கள். சுயநலமற்ற செயல்கள் ஏதுமில்லை, சுயநலம் இழிவுமில்லை.
- மக்களை எதைப் பற்றியும் எந்தப் பற்றுமற்ற வகையில் செல்ல வைப்பதே கல்வியின் நோக்கம்.
- பொது நன்மை, பொது உணர்ச்சி, பொது ஒழுக்கம், பொது நீதி சாத்தியமல்ல; ஒருவனுக்கு சத்தியமாக உள்ளது இன்னொருவனுக்கு அசத்தியமாகலாம்.

பெரியாரின் மேற்குறித்த சிந்தனைகள் சொல்லாடற் களத்தில் அனுமதிக்கப்படாமல் கவனமாகத் தடுக்கப்படுவது வெளிப் படை. இந்தச் சிந்தனைகள் மட்டுமின்றி அவரது சில அரசியற் செயற்பாடுகளும் இவ்வாறு முடக்கப்படுகின்றன; புறக்கணிக் கப்படுகின்றன. தேசியக் கொடி, தேசப்படம், அரசியல் சட்டம் ஆகியவற்றை எரித்தமை, இராமன் மற்றும் பிள்ளை யார் சிலைகளை இழிவு செய்தமை என்பவை இவற்றில் சில. பெரியாரின் அயல்நாட்டுப் பயணம் அங்கு அவரது சந்திப்பு கள் ஆகியன பற்றியும் யாரும் பேசத் துணிவதில்லை. ஆனைமுத்து அவர்கள் வெளியிட்ட பெரியாரின் அயல் நாட்டுப் பயணக் குறிப்பு நூல் தமிழ்ச் சூழலில் முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய மவுனங்களினூடாய்க் கட்டமைக்கப்படும் ‘பெரி யார் மரபு’ என்பதென்ன?

- பெரியார் ஒரு கடவுள் மறுப்பாளர், நாத்திகர், பகுத்தறி வுவாதி.
- பார்ப்பன எதிர்ப்பாளர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

- தமிழ்த் தேசப் பிரிவினையாளர்.
- பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் விடுதலைக்காக நேர்மையாகச் செயற்பட்டவர், இட ஒதுக்கீட்டிற்காகப் போராடியவர்.

எத்தனை ஆயிரம் பக்கங்கள் எழுதித் தள்ளினாலும் திரும்பத் திரும்பச் சொல்லப்படுபவை இவைதான். பெரியாரிடம் மேற்குறித்த பரிமாணங்களைக் காண இயலும் என்பதில் கருத்து மாறுபாடு இல்லை. ஆனால் பெரியார் இத்தகைய பரிமாணங்களுள் மட்டுமே சிறைப்படக் கூடியவரல்லர். அவருடைய பரிமாணங்கள் மேலும் விசாலமானவை; இவற்றை மீறித் தாண்டிச் செல்பவை; இவர்களுடைய பிடிக்குள் அகப்படாதவை. மறைக்கப்படுகின்ற இந்தப் பரிமாணங்களைத் தவிர்த்து கூறுகளாக மட்டுமே பெரியாரைப் புரிந்து கொள்ள முயற்சி செய்தால் நமக்குக் கிடைப்பது ஒரு மொண்ணையான, தட்டையான ஒற்றைப் பரிமாணப் பெரியாரே. திரும்பத் திரும்ப முன் வைக்கப்படும் இந்த மொண்ணைப் பிம்பத்தைப் பெரியாரே பல சந்தர்ப்பங்களில் மறுத்துள்ளார்.

எனவே, கவனமாகக் கட்டிக் காக்கப்படும் இந்த மவுனங்கள் உடைக்கப்படவேண்டும். 1993இல் தொடங்கி 'நிறப்பிரிகை' இப் பணியைச் செய்து வருவது உங்களுக்குத் தெரியும். இன்று இந்தப் பணியின் தேவை கூடுதலாகியுள்ளது.

www.tamilarangam.net

## 2

# மத நீக்கம் என்னும் பணியை மேற்போட்டுக் கொண்ட பெரியார்

தமிழ்ச் சமூகத்தில் மத நீக்கம் செய்கிற பணியைத் (Secularisation) தம் மேற்போட்டுக் கொண்டவர் பெரியார் என்கிற கருத்தை மீண்டும் ஒரு முறை நினைவூட்டிக் கொள்வோம். (பார்க்க: விடியல் பதிப்பகம் வெளியிட்டுள்ள 'பெரியாரியம் நிறப்பிரிகைக் கட்டுரைகள்' நூலுக்கு எழுதப் பட்ட முன்னுரை). தம்மையும் தமது பணியையும் குறித்த பெரியாரின் புகழ் பெற்ற பிரகடனம் வருமாறு:

> ஈ.வெ.ராமசாமி என்கிற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப் போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாய் ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு அதே பணியாய் இருப்பவன்.
>
> அந்தத் தொண்டு செய்ய எனக்கு யோக்கியதை இருக்கிறதோ இல்லையோ இந்த நாட்டில் அந்தப் பணி செய்ய யாரும் வராததினால் நான் அதை மேற்போட்டுக் கொண்டு தொண்டாற்றி வருகிறேன்.
>
> இதைத் தவிர வேறு பற்று ஒன்றும் எனக்கு இல்லாததாலும் பகுத்தறிவையே அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளையும் திட்டங்களையும் வகுப்பதாலும் நான் அத்தொண்டுக்குத் தகுதி உடையவன் என்றே கருதுகிறேன்.
>
> சமுதாயத் தொண்டு செய்பவனுக்கு இது போதும் என்றே கருதுகிறேன். (பெரியாரால் கைப்பட எழுதப்பட்ட பிரகடனம் - ஆ.தொ. முதல் தொகுதி, முகப்புப் பக்கங்கள்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாம் பணி செய்ய நேர்ந்த திராவிட சமுதாயம், உலகில் உள்ள பிற சமுதாயங்களை - குறிப்பாக மேலைச் சமூகங்களைப் - போல 'மானமும் அறிவும்' உள்ள சமுதாயமாக இல்லை என்கிறார் பெரியார். மேலைச் சமூகங்களில் பதினைந்தாம் நூற்றாண்டுக்குப் பின் ஏற்பட்ட அறிவொளிக் கால மாற்றங்கள் (Renaissance / Modernity) இந்தியச் சூழலில் ஏற்படாததைத் தான் பெரியார் இப்படிக் குறிப்பிடுகிறார். இதனை 'பெரியாரியம்' நூலுள் விரிவாய் விளக்கியுள்ளோம். (பார்க்க: 'பெரியாரியம்' முன்னுரை) அரசு, பண்பாடு, நீதி, கல்வி, தத்துவம் எனச் சகல துறைகளிலும் மதத்தின் ஆணை கோலோச்சிய மத்திய காலப் போக்குகளில் அதிரடியான பல மாற்றங்கள் ஏற்பட்ட காலத்தைத் தான் 'அறிவொளிக் காலம்' என்பர். அறிதல் முறையில் தன்னிலை யின் பங்கையும் பகுத்தறிவின் மேன்மையையும் பறைசாற்றிய காலம் அது. மதத்தின் பிடியிலிருந்து மொழி, பண்பாடு, கல்வி, அரசியல் முதலான சகல துறைகளும் பல்வேறு மட்டங்களில் விடுவிக்கப்பட்டன. நவீனத்துவத்தின் மிக முக்கியமான கூறாக விளங்கும் இச் செயற்பாட்டை மதநீக்கம் (Secularisation) என்பர்.

மேலைச் சூழலில் ஏற்பட்ட இந்த மகத்தான மாற்றங்கள் இந்தியத் துணைக் கண்டத்தில் ஏற்படவேயில்லை. இது ஏன் என்கிற கேள்வி ஒரு புறம் இருக்கட்டும். இந்தச் சூழலைச் சரியாகக் கணக்கில் எடுத்துக் கொண்ட தலையாய சிந்தனை யாளராகப் பெரியார் உள்ளார். வடக்கே அம்பேத்கர் இப் பணியைச் செய்தார். தமிழ்ச் சூழலில் மத நீக்கம் குறித்து இத்தகு தெளிவான ஓர்மையுடன்' செயற்பட்டமைக்கு பெரியாருக்கு இணையாக யாரையும் சொல்ல முடியாது. சமூகம் சனநாயகப்படுத்தப் படுவதற்கான முதல் நிபந்தனை யாக மத நீக்கம் அமைகிறது. இந்தியத் துணைக் கண்டத்தின் சீர்திருத்தவாதிகள், மறுமலர்ச்சியாளர்கள் எனச் சொல்லப் படுகின்ற யாரும் மதத்திற்குள் நின்று கொண்டுதான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமூகத்தைப் புதுப்பிக்க முனைந்தனர். மதநீக்கத்தின் முக்கியத் துவத்தைப் பெரியார், பூலே, அம்பேத்கர் ஆகியோர் மட்டுமே உணர்ந்தனர். மதநீக்கமின்றி சாதியொழிப்பும் இங்கு சாத்திய மில்லை என்பதையும் இவர்களே முன்வைத்தனர். மத நீக்கமின்றி சனநாயக அரசியலும் சாத்தியமில்லை என்றார் பெரியார்.

இங்கு நிலவிய உலகக் கண்ணோட்டத்தின் சகல அம்சங்களும் வேதங்களைப் பிரமாணமாகக் கொண்டிருந்தன; வருணா சிரமத்தை, பார்ப்பனியத்தை அடிப்படையாகக் கொண்டி ருந்தன; இந்த அடிப் படையிலேயே சமூகத்தின் பொதுப்புத்தி ('பொதுசன அபிப்ராயம்' - பெரியார்) கட்டமைக்கப் பட்டிருந்தது. மனிதத் தன்னிலைகள் கட்டமைக்கப்பட்டன. ஒவ்வொருவனும் தன்னைப் பார்ப்பானாக, சூத்திரனாக, பறையனாக உணரும் சூழலும் அந்த அடிப்படையில் விதிக்கப்பட்ட வாழ்நிலையைச் சகித்துக் கொள்ளும் உளநிலையும் நிலவியது. மொழி, வழமைகள், அன்றாட நடவடிக்கைகள், அரசியல், சட்டம் என அனைத்தும் மதக்கறை அதாவது, பார்ப்பனீயக் கறை படிந்ததாகவே இருந் தன. இந்த மொழிகளின் மூலம் சிந்தித்துக் கொண்டு இலக்கியமாக்கிக் கொண்டு, இத்தகைய பொதுசன அபிப்ராயங்களினூடாக வாழ்க்கையை விளங்கிக் கொண்டு வாழ நேர்ந்த யாரும் இந்தச் சூழலுக்குரிய தன்னிலைகளாக / (Subjects) குடிமக்களாக மாறுவது தவிர்க்க இயலாததாகியது.

இங்கே முக்கியமாகக் கருதத்தக்க அம்சம் என்னவெனில் வட மொழிக்கு எதிராக முன்வைக்கப்பட்ட தமிழ் மொழியும், பார்ப்பனீயத்திற்கு எதிராக முன்வைக்கப்பட்ட சைவ வேளாளப் பண்பாடும், வேதாந்தத்திற்கு மாற்றாக முன்வைக் கப்பட்ட சைவ சித்தாந்தமும், வேதங்களுக்குப் பதிலாக வைக்கப்பட்ட சைவ இலக்கியங்களும் ஏதோ ஒருவகையில் வருணாசிரமத்தை, சாதீயத்தை ஏற்றுக் கொண்டவையாகவும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேதங்களையும், பார்ப்பனீயத்தையும் பிரமாணமாகக் கொண்டவையாகவுமே இருந்தன என்பதே.

மதநீக்கம் நிறைவேற்றப்படாத சூழலில் பொதுசன அபிப்ராயத்திற்கு ஆட்பட்ட ஒருவருக்குத் தன்மதிப்பு அதாவது சுயமரியாதை இருக்காது. சமூக விடுதலையின் முதல் நிபந்தனை தனி மனித விடுதலை; அதாவது அச்சமூக உறுப்பினர் சுய மரியாதை கொள்வது. இந்தச் சுய மரியா தைக்குப் பெருந்தடையாக இருப்பது மத உணர்வு. எனவே மதத்திலிருந்து எல்லாவற்றையும் பிரித்தெறிவது முதற் பணியாக அமைந்து விடுகிறது. பெரியாரின் கீழ்க்கண்ட கூற்று இதனைத் தெளிவாக்கும், மொழிப்பற்றிப் பேச வரும்போது,

> தமிழ் மக்களின் தன்மதிப்பு என்பதல்லால் வெறும் பாஷையைப் பற்றியே நான் எவ்விதப் பிடிவாதமும் கொண்டவனும் அல்லன். ..முதலாவதாக, தமிழ் முன் னேற்றமடைந்து உலக பாஷை வரிசையில் அதுவும் ஒரு பாஷையாக இருக்க வேண்டுமானால் தமிழையும் மதத்தையும் பிரித்துவிட வேண்டும். மத சம்பந்தமற்ற ஒருவனுக்குத் தமிழில் இலக்கியம் காண்பது மிகமிக அரிதாகவே இருக்கிறது. தமிழ் இலக்கணம் கூட மதத்தோடு பொருத்தப்பட்டே இருக்கிறது. உதாரணமாக, 'மக்கள், தேவர், நாகர் உயர்திணை' என்றால் என்ன? நாகர்கள் யார்? தேவர்கள் யார்? இலக்கணத்திலேயே மதத்தைப் போதிக்கும் சூழ்ச்சிதானே இது?

(ஆ.தொ. பக்.976. இந்நூலில் காட்டப்படுகிற மேற்கோள்கள் அனைத்திலும் அழுத்தங்கள் நம்முடையன)

எனப் பெரியார் குறிப்பிடுவதை நாம் இந்தப் பின்னணி யிலேயே விளங்கிக் கொள்ள முடிகிறது. ஏராளமான எடுத்துக் காட்டுகளுடன் மிகவும் விரிவாக நமது மொழி, இலக்கியம், அரசியல், சட்டம் எல்லாம் எந்த அளவிற்கு இந்து மயமாகி யுள்ளன என்பதை விளக்கினார் பெரியார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 3

# மொழி இயற்கையானதல்ல, எல்லாம் கற்பிதங்கள்தான், வெங்காயம்!

மதத்தை நீக்கி அந்த இடத்தில் 'அறிவை' நிலை நாட்டி விட்டால் எல்லாப் பிரச்சினைகளும் முடிவுக்கு வந்து விடுவதில்லை. இவ்வாறு கட்டமைக்கப்படும் அறிவு இன்னொரு வகையான அதிகாரத்திற்கு வழியமைப்பதாக அமைந்துவிடுகிறது, அறிவு, உண்மை எதுவுமே இயற்கை யானவை அல்ல. எல்லாமே கட்டமைக்கப்படு பவைதான். யார் இவற்றைக் கற்பிக்கிறார்களோ அவர்களது நலனுக்கும் அதிகாரத்திற்குமே இவை வழிவகுக்கின்றன. ஆனால், இவற்றைக் கட்டமைப்பவர்கள் இவற்றைக் கட்டமைப்பு எனச் சொல்வதில்லை, இயற்கை என்பர்.

பதினைந்து, பதினாறாம் நூற்றாண்டுகளின் அறிவொளி மரபும் இதைத்தான் செய்தது. எனவே, இவ்வாறு உருவாக்கப்பட்ட பகுத்தறிவின் ஆட்சி இன்னும் நுணுக்கமான அதிகாரச் செயற்பாடுகளுக்கும் வன்முறைகளுக்கும் வழிவகுத்தது. அறிவொளி மரபின் வினைபொருட்களாய் உருவான நிறுவனங்கள் யாவும் (பாராளுமன்றம், மருத்துவமனை, பள்ளிக்கூடம், பத்திரிகைகள், நீதி வழங்குமுறை...) நுண்மையான அதிகார நிறுவனங்களாகவும், வன்முறைக் களங்களாகவும் விளங்கின. எனவே இந்த அதிகாரங்களுக்கு எதிராக இயங்குகிறவர்கள் இந்த நிறுவனங்கள் மற்றும் இவை முன்வைக்கும் கற்பிதங்கள் யாவும் இயற்கையானவையல்ல, கட்டமைக்கப்பட்டவைதாம் என்பதைத் தோலுரித்துக் காட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேண்டியவர்களாகிறார்கள். கட்டமைப்பு என்பதை நிறு வினால்தான் வேறு வகைக் கட்டமைப்பு சாத்தியம் என்பதைச் சொல்ல முடியும். இயற்கை என்றால் அது மாற்றப்பட வேண்டியதல்ல என்றாகிவிடும்.

மதத்திற்கு எதிராகப் பகுத்தறிவைப் போற்றிய பெரியார், பகுத்தறிவின் பெயரால்கூட அதிகாரத்தைக் கட்டமைக்க முயன்றாரில்லை. எல்லாமே கற்பிதங்கள்தாம், எதுவும் இயற்கையானதல்ல என்கிற பார்வையை அவர் தொடர்ந்து வற்புறுத்தி வந்ததும், எவற்றையெல்லாம் பொதுசன அபிப் ராயம் புனிதங்கள் என்று போற்றுகிறதோ, வணங்குகிறதோ, எவற்றையெல்லாம் இழிவுகள் என ஒதுக்குகிறதோ, ஓரங்கட்டு கிறதோ அவற்றையெல்லாம் அவர் கட்டுடைத்ததும், வெங்காயம் என நகைத்ததும், ஒன்றுமில்லை என நிறு வியதும், ஊர் ஊராய்ப் பிரச்சாரம் செய்ததும், ஊர்வலமாய்ச் சென்று உடைத்து நொறுக்கியதும் இங்கே சிந்திக்கத்தக்கன.

பல்வேறு புனிதங்களையும் பற்றிப் பேச வரும்போதும் அவை குறித்து ‘இயற்கையானவையல்ல’, ‘கற்பனை’, ‘சூழ்ச்சி’, ‘கற்பிக்கப்பட்டது’ முதலான சொற்களைப் பெரியார் பயன்படுத்துவார். மொழிப்பற்றின் அடிப்படையில் அரசியல் எழுச்சி பெற்றுக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில்,

> மொழி என்பது ஒரு மனிதனுக்கு அவ்வளவு முக்கியமான சாதனம் அல்ல; அது இயற்கையானதுமல்ல அதற்கு ஒரு கட்டாயமும் தேவையில்லை. மொழி மனிதனுக்குக் கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளும் அளவுக்கு, விஷயங் களைப் புரிந்துகொள்ள வாய்ப்பளிக்கும் அளவுக்குத் தே வையானதே ஒழிய பற்றுக் கொள்வதற்கு அவசிய மானதல்ல. **(ஆ.தொ.பக். 986)**

என்று அவர் குறிப்பிட்டார். மொழிகள் தனித்தனியாகப் பிரிவதும், மொழிக்குள்ளேயே வழக்கு வேறுபாடுகள் ஏற்படுவதும் தட்ப வெப்பச் சூழல், போக்குவரத்தின்மை,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிற மொழிக் கலப்பு ஆகியவற்றின் விளைவுதான் என்றும் அவர் குறிப்பிட்டார் (ஆ.தொ.பக்.965-66, 981-83). காலந்தோறும் மொழி அமைப்பிலும், வரிவடிவத்திலும், சொற் களஞ்சியத் திலும், உச்சரிப்பிலும் மாற்றம் ஏற்படுவது இயல்பு (ஆ.தொ.பக். 954, 960). எனவே மொழியில் மாற்றங்கள் செய்யக் கூடாது என்பது மடமை (ஆ.தொ.பக்.961) என்றார்.

மொழி, மொழியால் கட்டமைக்கப்பட்ட சொல்லாடல்கள் முதலானவை இயற்கையானதல்ல, வெறும் கட்டமைப்புத் தான் என்கிற புரிதல் கொள்ளும் போதுதான் அதில் பொதிந்து கிடக்கும் வில்லங்கங்கள் பிடிபடும்; ஆபத்துகள் உணரப் படும். பெண்ணடிமைத்தனம் பற்றிப் பேச வரும் போது கூட எவ்வாறு சொத்துறவு, தனியுடைமை முதலியவற்றோடு ஆணாதிக்கம் இணைந்துள்ளது என்பதை விளக்கமாகச் சொன்ன போதும் (ஆ.தொ.பக் : 108, 160-170) நமது சூழலைப் பொறுத்தமட்டில் எவ்வாறு 'கற்பு' போன்ற கற்பிதங்கள் பொருளியல் காரணிகளையும் மீறி, மதவியற் காரணிகளால் கட்டமைக்கப்பட்டுள்ளன என்பதைக் குறிக்கின்றார். ஆங்கிலத்தில் 'கற்பு' என்பதற்குச் சமமான Chastity, Virginity போன்ற சொற்கள் பாலுறவுத் தூய்மையையும் உடலுறுவுக்கு முற்பட்ட கன்னிமையையும் மட்டுமே குறியீடு செய்கின்றன.

> ஆனால், ஆரிய பாஷைகளில் பார்க்கும்போது மாத்திரம் 'கற்பு' என்கின்ற பதத்திற்கு பதிவிரதை என்கிற பொருள் கொள்ளப்படுகிறது. இந்த இடத்தில்தான் கற்பு என்கின்ற வார்த்தைக்குள் அடிமைக் கருத்து நுழைக்கப்படுகின்றது என்பது எனது அப்பிராயம். அதாவது பதியைக் கடவுளாகக் கொண்டவள், பதியைத் தவிர வேறு யாரையும் கருதாதவள் எனப் பொருள் கொடுத்திருப் பதுடன் 'பதி' என்ற வார்த்தைக்கு அதிகாரி, எஜமான், தலைவன் என்கின்ற பொருள்கள் இருப்பதால் அடிமைத் தன்மையை இவ்வார்த்தைகள் பலப்படுத்து கின்றன (ஆ.தொ.பக் : 115, 116).



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனச் சொல்வதன் மூலம் இத்தகைய பார்ப்பனீய மயமான மொழி, கலாச்சார மற்றும் குறியீட்டுச் செயல்பாடுகள் அடிமைத் தன்னிலையாக்கத்தில் வகிக்கும் பங்கை, அதாவது அடிமை உணர்வுக்கு வழி வகுப்பதைச் சுட்டிக் காட்டுகிறார். இதுபோலவே 'கன்னிகாதானம்' போன்ற சொற்களையும் அவர் கட்டுடைக்கிறார். 'கன்னிகாதானம்' என்ற சொல்லைக் 'கன்னிக்கொடை' என்பது போலத் தூய தமிழ்ப்படுத்தினால் மட்டும் போதுமா என்கிற கேள்வியை நமக்குள் எழுப்புகிறார். மொழித் தூய்மையின் போது வடமொழி நீக்கம் மட்டுமே செய்யப்படுகிறது; இந்துமதம், சைவம், பார்ப்பனீயம் நீக்கப்படாமல் தனித் தமிழிலும் பின்னிப் பிணைந்திருப்பதை நாம் கண்டுகொள்ளாமல் இருந்துவிடலாகாது.

## 4

## தேசம் என்றொரு கற்பிதம் : 'நான் ஒரு தேசத்துரோகி'

> நான் ஒரு தேசாபிமானியல்லன். அது மாத்திரமல்ல தேசாபிமானத்தை புரட்டு என்றும்அது தனிப்பட்டவர் களின் வயிற்றுச் சோற்று வியாபாரம் என்று சொல்லியும், எழுதியும் வரும் 'தேசத் துரோகி' யாவேன் (ஆ.தொ. பக் : 383)

எனப் பிரகடனப் படுத்தியவர் பெரியார். சோவியத் ரசியா, அய்ரோப்பா முதலான நாடுகளுக்குச் சென்று திரும்பும் வழியில் (1932) கொழும்பில் பேசும் போது,

> தோழர்களே! கடவுள், மதம், ஜாதியம், தேசியம், தேசாபிமானம் என்பவைகள் எல்லாம் மக்களுக்கு இயற்கையாக, தானாக ஏற்பட்ட உணர்ச்சிகள் அல்ல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> சகல துறைகளிலும் மேற்படியில் உள்ளவர்கள் தங்கள் நிலை நிரந்தரமாயிருக்க ஏற்படுத்திக் கொண்டிருக்கும் கட்டுப்பாடான ஸ்தாபனங்களின் மூலம் பாமர மக்களுக்குள் புகுத்தப்பட்ட உணர்ச்சிகளேயாகும். இந்தப்படி புகுத்தப்பட வேண்டிய அவசியமும், காரணமும் என்னவென்று பார்த்தால், அவை முற்றும் பொருளாதார உள்எண்ணத்தையும், அன்னியன் (பிறர் – அ.மா) உழைப்பாலேயே வாழ வேண்டும் என்கிற உள் எண்ணத்தையும் கொண்ட பேராசையும் சோம்பேறி வாழ்க்கைப் பிரியமுமேயாகும். *(பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடாகிய 'பெரியார் களஞ்சியம்' தொகுதி 1, பக்:78).*

என்று கூறி மதப்பற்று, சாதிப்பற்று, தேசப்பற்று என்கிற எல்லாப் பற்றுகளுமே கட்டமைக்கப்பட்டவைதாம் என வலியுறுத்துவதோடு இக்கட்டமைப்பிற்குப் பின்னாலுள்ள அரசியல், பொருளாதார நலன்களையும் சுட்டிக்காட்டி விடுகிறார். இராசிபுரத்தில் தாழ்த்தப்பட்ட மக்களை நோக்கிப் பேசும் போது.

> எந்தக் கட்சியிலும் நீங்கள் சேரக்கூடாது என்று சொல்ல வேண்டியவனாய் இருக்கிறேன். உங்களுக்குள் தேசாபிமானம் என்ற யோக்கியமற்ற சூழ்ச்சிக்கு நீங்கள் ஆளாகக் கூடாது. அது சோம்பேறிகள், காலிகள் ஆகியவர்கள் பிழைப்புக்கு ஏற்படுத்தப்பட்ட மோட்சம், நரகம் போன்ற மூட நம்பிக்கையாகும்... இன்றைய தேசாபிமானம் என்பது உங்களுடைய சுயமரியாதை யையும் முற்போக்கையும் தடுப்பதாகவே இருந்து வருகிறது. அதற்காகவே தேசாபிமானம் கற்பிக்கப்பட்டது என்று கூடச் சொல்லலாம். *(ஆ.தொ.பக் : 68-70)*

என்று குறிப்பிடும் பெரியார் அதே உரையின்போது தாழ்த்தப்பட்டவர்களின் தனித்துவத்திற்கு தேசாபிமானம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிராகவே இருக்கும் என்கிறார். வட்ட மேசை மாநாட்டில் தனிப் பிரதிநிதித்துவத்தை ஒழிப்பதுதான் தேசாபிமானம் என்று காந்தியார் சொன்னதை எடுத்துக் காட்டுகிறார். இன்னும்கூட தமிழ்த் தேசியவாதிகள் தாழ்த்தப்பட்டோரின் தனித்துவம் என்கிற கருத்தாக்கத்தை வன்மையாக எதிர்ப்பது இத்துடன் இணைத்துப் பார்க்கப்பட வேண்டிய ஒன்று.

தேசியம் என்பது மேல்தட்டினரால் அவர்களது நலன்களுக்காகக் கட்டமைக்கப்பட்டது என்பதைப் பெரியார் மீண்டும் மீண்டும் வற்புறுத்துகிறார்.

> தேசியம் என்னும் பதமும் சரீரப் பிரயாசை ஒரு சிறிதும் எடுத்துக்கொள்ள இஷ்டமில்லாமல், நெஞ்சத்தில் அழுக்குப் படாமல், பாமரர்களை ஏமாற்றிப் பிழைக்கவும், கீர்த்தி பெறவும் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு சாதனமாகும். *(ஆ.தொ.பக் : 371).*
>
> பொதுவாக தேசியம் என்னும் வார்த்தையே அர்த்தமற்றது என்றும், மோசக்கருத்து கொண்டது என்றும், அதில் பணக்காரத் தன்மை பிரதிபலிப்பதோடு, பணக்காரத் தன்மையை ஆதரிப்பதற்கென்றே கற்பிக்கப்பட்ட **தென்றும்** பல தடவை கூறி வந்திருக்கிறோம்.
>
> நாம் மாத்திரமல்ல பல மேல்நாட்டு அறிஞர்களும் தேசியத்தின் தன்மையைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார் கள். ஜான்சன் என்கிற ஒரு மேதாவி, 'தேசியம் (தேசாபிமானம்) என்பது ஒரு வடிகட்டின அயோக்கியத் தனம்' என்று குறிப்பிட்டுயிருக்கிறார். இந்த அபிப்ராயம் முதன் முதலில் தேசியம், தேசாபிமானம் என்கிற வார்த்தைகள் எங்கு உண்டானதோ அங்கு ஏற்பட்ட அபிப்ராயமே தவிர இந்தியாவில் 'தேசிய விரோதிகள்', 'தேசத் துரோகிகள்', 'சர்க்கார் குலாம்கள்' (அதாவது தாங்கள் – அ.மா) என்று கருதப்படுகிற வர்களால் சொல்லப்பட்டதல்ல...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> தேசம் தேச மக்களுக்கு பொது... தேசத்தின் செல்வம், விளைபொருள், போக்குவரத்து, வர்த்தகம், தொழிற் சாலை ஆகியவற்றின் பலன்கள் இந்தத் தேசத்து எல்லா மக்களுக்கும் பொது என்று சொல்லக்கூடிய காரியங்கள் தேசாபிமானத்தில் இல்லவும் இல்லை *(ஆ.தொ.பக் : 380, 381).*

என்றெல்லாம் கூறும் பெரியார் மேனாடுகளில் தேசியம் பணக்காரத்தன்மையால் கட்டமைக்கப்பட்டது, இங்கே பணக்காரத் தன்மையோடு 'மேற்'சாதித் தன்மையையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்கிறார். அகில இந்தியத் தேசத்தின் பார்ப்பன பனியா–சத்திரியப் பின்புலத்தையும், தமிழ்த் தேசியத்தின் வேளாள-செட்டியார் மற்றும் ஆதிக்க சாதிப் பின்புலத்தையும் நாம் அவ்வளவு எளிதாக மறந்து விட இயலாது. நம்நாட்டுத் தேசியவாதிகளைப் பற்றிச் சொல்ல வரும்போது,

> மக்கள் சாதி பேதத்தையும், மத பேதத்தையும் ஒழிக்க தேசியவாதிகள் கவனிக்காமலிருப்பது மாத்திர மல் லாமல், அவற்றை நிலைநிறுத்தவும் வலுப்படுத்தவும் முயற்சிக்காமலிருப்பதும் இல்லை. *(ஆ.தொ.பக் : 373)*

என்று கூறும் பெரியார் அன்றையச் சூழலில் சாதி எதிர்ப்பு மசோதாக்களைக் கொண்டுவருவதில் 'தேசத் துரோகிகள்' முன்னிற்பதையும் தேசியவாதிகள் இதற்கு எதிராக நிற்ப தையும் அடையாளம் காட்டுகிறார்.

பிறிதோரிடத்தில் 'தேசிய வியாபாரத்'தைக் கடுமையாகச் சாடும் பெரியார்,

> ...இந்த நாட்டில் பொது மக்களின் நலத்திற்கும் பாதுகாப்பிற்கும் ஒழுக்கத்திற்கும் விரோதமானது என்று சொல்லத்தகுந்த கள், சாராயக்கடை, சூதாடுமிடம், விபசார விடுதி, கொள்ளைக் கூட்டத்தார் முதலிய எல்லா ஒழுக்கமும் நாணயமும் கெட்ட துறைகள், இயக்கங்கள் என்பவைகளையெல்லாம் விட மிக்க மோசமான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துறையாகவும் ஸ்தாபனமாகவும் உள்ள இடத்தை மேற்படி தேசிய வியாபாரம் அடைந்துவிட்டது. ...இது மாத்திர மல்லாமல் எந்தவிதமான யோக்கியர்களையும், இன்றையத் தேசியமானது அயோக்கியர்களாக்கத் தயாராக இருப்பதோடு, வெளியில் இருக்க முடியாமல் உள்ளே இழுத்துப் போட்டுக் கொள்ளுகிறதாகவே இருக்கிறது. *(ஆ.தொ.பக் : 375, 376).*

என்று தேசியத்தை ஒழுக்க விரோதமானதாகவும் கண்டிக் கிறார்.

இங்கொன்றைச் சொல்வது முக்கியம். பெரியாரைத் (தமிழ்த்) தேசப் பிரிவினைவாதியாகச் சுட்டிக் காட்ட முயல்வோர், பெரியார் இங்குக் குறிப்பிடுவதெல்லாம் அகில இந்தியத் தேசியத்தைத்தான் எனச் சொல்லித் தப்பிக்க முயலலாம். ஆனாலும் பெரியார், அவர்களுக்கு இந்த வாய்ப்பை அளிக்கத் தயாராக இல்லை. அவரது அரசியல் வாழ்வின் முதற் கட்டத்தில் ஓங்கி நின்ற அகில இந்தியத் தேசியம் என்பதே அன்று அவரது பிரதான இலக்காக இருந்தது என்றாலும் தேசியம் குறித்த அவரது சிந்தனைகள் அகில இந்தியத் தேசியம் என்கின்ற எல்லைக்குள் ஒடுங்காமல், ஒட்டு மொத்தமாய்த் தேசியம் குறித்த விமர்சனமாகவே இருந்தது. இதனை அவர்,

நான் இந்திய சாம்ராஜ்யம், இந்தியத் தேசாபிமானம் என்பதைப் பற்றி மாத்திரம் பேசுவதாக நினைத்து விடாதீர்கள். உலகத்திலுள்ள எல்லாத் தேசத்தின் தேசாபிமானங்களையும், சுயராஜ்யங்களையும் தெரிந்து தான் பேசுகிறேனேயொழிய கிணற்றுத் தவளையாய் இருந்தோ வயிற்றுச் சோற்றுச் சுயநல தேசபக்கதனாக இருந்தோ நான் பேச வரவில்லை.

எந்த தேசத்திலும் எப்படிப்பட்ட சுய ராஜ்ஜியத்திலும் குடியரசு நாட்டிலும் ஏழை–பணக்காரன், முதலாளி–



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> தொழிலாளி வித்தியாசம் இருந்துதான் வருகிறது. நம் நாட்டில் இவைகள் மாத்திரமல்லாமல் பார்ப்பான்–பறையன், மேல்சாதி–கீழ்சாதி ஆகிய அர்த்தமற்ற அயோக்கியத்தனமான வித்தியாசங்களும் அதிகப்படியாக இருந்து வருகின்றன. இவைகளை அழிக்கவோ ஒழிக்கவோ இன்றைய தேசாபிமானத்திலும் சுயராஜ்ஜியத் திலும் கடுகளவாவது யோக்கியமான திட்டங்கள் இருக்கின்றனவா என்று உங்களைக் கேட்கிறேன். *(ஆ.தொ.பக் : 383,384)*

என்று வெளிப்படையாகவே முன்வைத்துவிடுகிறார். எல்லாத் தேசியங்களுமே இப்படித்தான் ; சாதியச் சூழலில் தேசியம் இன்னும் மோசமானதாகவே இருக்கும். அங்கே பணக்காரன் தன்னுடைய ஆதிக்கத்திற்காகத் தேசீய அரசியல் நடத்துகிறான் என்றால் இங்கே 'மேல்சாதி'க்காரன் தன்னுடைய அதிகாரத் திற்காக தேசிய அரசியல் பேசுகிறான். இறுதியாக,

> இப்படிப்பட்ட தேசாபிமானம், சுயராஜ்ஜியாபிமானம் என்கிற சூழ்ச்சிகளையும், தந்திரங்களையும் விட்டு விட்டு 'மனித ஜீவ அபிமானம்' என்கிற தலைப்பின் கீழும், கொள்கையின் கீழும் எல்லாரும் ஒன்று சேர்கின்ற வரையில் நான் 'தேசத்துரோகி'யாக இருந்து தேசாபி மானப் புரட்டையும், சுயராஜ்ஜியப் புரட்டையும் (அதாவது தேசஅரசு - அ.மா) வெளியாக்காமல் இருக்க முடியாது.

என்று அவ்வுரையை முடிக்கிறார். பிறிதோரிடத்தில் பேச வரும்போது,

> தேசாபிமானம், தேசபக்தி என்பவைகள் சுயநல சூழ்ச்சி என்றும், தனிப்பட்ட வகுப்பு மக்களால் தங்கள் வகுப்பு நலத்துக்காகப் பாமர மக்களுக்குள் புகுத்தப்படும் ஒரு (வெறி) போதை என்றும் பல தடவைகள் நாம் சொல்லி வந்திருக்கின்றோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மற்றும் தேசாபிமானம் என்பது காலிகளுக்கு ஏற்பட்ட கடைசி ஜீவன மார்க்கம் என்று மேனாட்டு அறிஞர் ஒருவர் கூறியது ஆப்தமொழி என்றும் பல தடவைகள் எடுத்துக் காட்டி இருக்கிறோம்.

இவற்றை எந்த ஒரு தேசபக்தனும் தேசாபிமானியும் இதுவரை மறுக்கவேயில்லை என்பதோடு இவ்வாப்த வாக்கியங்கள் நிறைந்த ஆங்கிலப் புத்தங்கள் பாடப் புத்தங்களாகவும் வைக்கப்பட்டு வந்திருக்கின்றன. இனியும் யாருக்காவது இவற்றில் சந்தேகம் இருக்கு மானால் இன்றைய அபிசீனியா-இத்தாலி யுத்த மேகங் களையும், இடியையும் மின்னலையும் பார்த்தால் கண்ணாடியில் முகம் தெரிவது போல விளங்கும்.

...இளைத்தவனை வலுத்தவன் கொடுமைப் படுத்துவதும், ஏமாந்தவனைத் தந்திரசாலி ஏமாற்றுவதும் இன்று ஆஸ்திகர்களுடைய கடவுள்களின் இரண்டு கண்களாகவும் தேசபக்தர்கள், தேசாபிமானிகள் என்பவர்களின் ஜீவ நாடியாகவும் இருந்து வருகின்றன. *(ஆ.தொ.பக் : 385, 386)*

எனத் தேசியக் கற்பிதத்தின் ஆபத்துகள் பற்றியும் தேசிய வெறியின் அடிப்படையிலான போர் அழிவுகள் குறித்தும் உலக அளவில் பல எடுத்துக் காட்டுகளையும் முன் வைக்கிறார். தேசபத்தி என்கிற வெறியூட்டி தேசப்பாதுகாப்பு, பாதுகாப்புச் செலவினங்கள் முதலியன விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவை என்கிற நிலையை ஏற்படுத்தி, ஏழை எளிய நாடுகளின் மிகக் குறைந்த வருமானங்களில் மிகப்பெரும் பகுதியை பாதுகாப் புக்கென ஒதுக்கி, அதன் மூலம் ஏராளமான லஞ்ச ஊழல்களுக்கு வழி வகுத்துத் தேசியவாதிகள் பயனடைகிற இன்றைய நடவடிக்கைகளை நாம் நினைவிற்குக் கொண்டு வந்தால் 'தேசியம் ஒரு ஒழுக்கக் கேடு' என்கிற பெரியாரின் கூற்று விளங்கும். அகில இந்தியத் தேசியம் மட்டுமல்ல எல்லாத் தேசியங்களுமே இப்படித்தான் என்கிற தெளிவான புரிதலோடு இயங்கிய ஒரு எதிர்த் தேசியவாதிதான் பெரியார்.

www.tamilarangam.net

# 5

# பெரியாரின் தமிழ்நாட்டுப் பிரிவினைக் கோரிக்கையும் தமிழ்த் தேசியமும்

*பெரியார் திராவிடநாட்டுப் பிரிவினையையும் பின்னர் இறுதிவரை தமிழ்நாட்டுப் பிரிவினையையும் கோரியவர். 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று முழங்கியவர். மரணத்தை நெருங்கிக் கொண்டிருக்கும்போதுங் கூட இதற்காகப் போராடத் தயாராகுமாறு மக்களுக்கு அறைகூவல் விடுத்தவர். எனவே பெரியாரைத் தமிழ்த் தேசியவாதி எனச் சொல்லலாமா?*

தேசியம் ஒரு கற்பிதம்; இயற்கையான ஒன்றல்ல; கட்டமைக்கப்பட்டது எனச் சொன்னவர் பெரியார். தேசியம் எவ்வாறு கற்பிக்கப்படுகிறது? இந்தக் கற்பித முயற்சியில் கதையாடல்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. தமிழ்த் தேசப் பெருங்கதையாடல்களைப் பொறுத்த மட்டில் தமிழ்ப் பற்று, சங்கப் பெருமை, சிலப்பதிகாரம், கண்ணகியின் கற்பு, கனக விசயர் தலையில் கல் ஏற்றியது, ராஜராஜ சோழன், ராஜேந்திரசோழன், அனுராதபுரத்தையும் பொலனறுவையைத் தீக்கிரையாக்கிய தீரம், கல் தோன்றி மண் தோன்றாக் காலப் பழமை, காவிரிச் சிறப்பு, சைவப் பெருமை, பெரிய கோயில்..... என்கிற ரீதியிலான பெருங்கதையாடல் களின்றித் தமிழ்த் தேசமில்லை. அண்ணா தொடங்கி இன்றைய தமிழ்த் தேசியர் வரை இந்தப் பெருங்கதையாடல்கள் அனைத்தையுமோ பெரும்பாலானவற்றையோ பேசியவர்கள் தாம்; பேசி வருபவர்கள்தாம். பொதுவுடைமைக் கட்சியில் இருந்தவரை 'அஸ்வகோஷ்' என்ற அவைதீக மரபில் வந்த பெயரைச் சூடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இடம் வந்த தோழர் ஒருவர் தமிழ்த்தேசக் கட்சிக்கு வந்த பின்னர் 'இராஜேந்திர சோழன்' என்கிற வைதீக மரபில் வந்த பெயரைத் தாங்கி வலம் வருவதை நாம் அறிவோம்.

தமிழ்நாட்டுப் பிரிவினை குறித்துப் பெரியார் பேசி வந்த போதிலும், அதற்காகத் தீவிரமான போராட்டங்களை அறிவித்த போதும் அதற்கெனப் பெருங்கதையாடல் எதையும் அவர் விரித்ததில்லை. சொல்லப் போனால் பெரியார் எது குறித்துமே எந்தப் பெருங்கதையாடல்களையும் விரித்த தில்லை. எல்லாப் பெருங்கதையாடல்களையும் 'வெங்காயம்' என உரித்தெறிவதே அவரது வாடிக்கையாக இருந்தது.* தமிழ்த் தேசப் பெருங்கதையாடல்களும் அவரது கட்டுடைப் பிற்குத் தப்பியதில்லை. தமிழைக் காட்டு மிராண்டிமொழி என அவர் சொன்னதொன்றே இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. நமது வரலாற்றுப் பெருமைகளை அவரைப் போல நகை யாடியவர் யாருமில்லை

பெருங்கதையாடல்களினூடாக ஊட்டப்படும் தேசிய வெறி பாசிசமாக உருப்பெறுவதை வேறு சில சந்தர்ப்பங்களில் பேசியுள்ளோம்.

தமிழர்களுக்கான ஒரு நாடு என்பதற்காகவோ, தமிழ்ப் பெருமை அல்லது தமிழ்ப் பண்பாட்டை முதன்மைப் படுத்தி யோ, அல்லது அவற்றைக் காப்பதெற்கென்று சொல்லியோ பெரியார் தமிழ் நாட்டுப் பிரிவினை கோரவில்லை. 'வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது' என்பது போன்ற முழக்கங் களைக்கூட அவர் பெரிதாய் முழங்கித் திரிந்ததில்லை. 'வடவர்' என்கிற 'எதிரி'யைக் காட்டிலும் ஆரியர், பார்ப்பனர் என்கிற எதிரிகளையே அவர் முன்னிலைப்படுத்தினார். இசுலாமியரையும் தாழ்த்தப் பட்டவர்களையும் அவர்கள்

---

* 'வெங்காயம்' எனப் பெரியார் அடிக்கடிச் சொல்லி வந்ததை அவரது கட்டவிழ்ப்புச் செயல்பாடுகளோடு பொருத்திச் சொன்னவர் திண்டுக்கல் சிவா.

www.tamilarangam.net

எம்மொழி பேசியவராயினும், இந்தியாவின் எப்பகுதியில் பிறந்தவராயினும் அவர்களைப் பெரியார் ‘பிற’ராகக் கட்டமைக்கவில்லை. ஆனால், இன்றைய தமிழ்த் தேசியர்கள் அம்பேத்கரை வடக்கத்தியர் என ஒதுக்குவதும் தெலுங்கு பேசுகிற சக்கிலியர்களுக்கு இட ஒதுக்கீடு கூடாது எனச் சொல்வதும் முசுலிம்கள் ததமிழ்ப்பற்றோடு இருக்க வேண்டும் என மிரட்டுவதும் ஒப்பிடற்குரியன.

சாதி ஒழிப்பை, பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பை முதன்மைப் படுத்தி இயங்கி வந்த பெரியார் சாதிக்கும் பார்ப்பனியத் திற்கும் ஆதாரமாக இருப்பது இந்து மதமும் இந்திய அரசியல் சட்டமும்தாம் என உறுதியாக நம்பினார். ‘‘நம் மக்கள் எளிதில் மதம் மாறமாட்டார்கள். மதம் மாறுவதை இழிவாய்க் கருதுபவர்களாவார்கள்’’ (ஆ.தொ. பக் : 1980-81). எனவே இந்து மதத்திலிருந்து வெளியே வாருங்கள் என அழைப்பதற்குப் பதிலாக இந்திய அரசியல் சட்டத்திலிருந்து விடுதலை பெறுவோம் என அழைத்தார் அவர். அதாவது சாதியை, பார்ப்பனியத்தை எதிர்க்க இந்தியத் தேசியத்தி லிருந்து விடுபட வேண்டும் என்பதுதான் அவரது அணுகல் முறை.

அப்படியானால் சாதிக்கும் பார்ப்பனியத்திற்கும் ஆதாரமாக இருக்கும் நிலையை இந்திய அரசியல் சட்டம் கைவிட்டு விட்டால் பெரியார் இந்தியத் தேசியத்திலேயே இருக்கச் சம்மதித்திருப்பாரா? ஆம். சாதி விசயத்தில் சட்டத்தைத் திருத்த இந்திய மய்ய அரசு தயாராயிருந்தால் தனித் தமிழ்நாடு வேண்டாம்; இந்தியத் தேசியத்துக்குள்ளேயே இருந்து விடுகிறேன் என்றார் பெரியார்.

> மக்கள் உணர்ச்சியை, மானத்தை இலட்சியம் செய்கிற அரசாங்கமாய், மக்கள் நலனுக்காக ஆட்சி செய்யப் படுகிற ஆட்சியானால் உடனே சட்டசபை கூடி மக்களில் சூத்திரர் இல்லை, கீழ் ஜாதி இல்லை, எல்லாரும் சமம் என்று சட்டம் செய்திருக்க வேண்டாமா?
>
> அதெப்படி செய்யாததால் மான உணர்ச்சியுள்ள மக்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒன்று கூடி அரசாங்கத்தை ‘சட்டம் செய், எங்கள் இழிவை நீக்கு’ என்று கேட்கிறார்கள். இதில் தப்பு என்ன? யோக்கியமான அரசாங்கம் இதைச் செய்ய வேண்டும். செய்யாவிட்டால் காரணம் சொல்ல வேண்டும். இரண்டும் இல்லாமல், ‘பிரிவினை கேட்கிறான், நடவடிக்கை எடு’ என்று சொன்னால், மிரட்டினால், கேட்கும் மனிதன் பயந்து கொண்டு சும்மா இருந்துவிடுவானா? சட்டத்தை மாற்றாவிட்டால் ஆட்சியை மாற்ற வேண்டியதுதான் கடமையாகும் என்றுதானே கருதிக் கொள்ளுவான்; செயல்படுவான்; இதில் தப்பு என்ன?

எனவே அம்மையார் (இந்திரா காந்தி-அ.மா) மக்கள் நாட்டுப் பிரிவினை கேட்கக் கூடாது; இந்திய ஆட்சியில் குடிமகனாகவே இருக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவராய் இருந்தால், இந்திய ஆட்சியில் பிராமணர் இல்லை; சூத்திரர் இல்லை; பார்ப்பான் தாசி மகன் இல்லை; எல்லா குடி மக்களும் சம அந்தஸ்து உள்ள சகோதரத் தன்மை உள்ள மக்கள் ஆவார்கள் என்று சட்டம் செய்யட்டும். ஜனாதிபதியைக் கொண்டு அவசரச் சட்டம் பிரகடனம் செய்யட்டும்.

அப்படி இல்லாவிட்டால் பிரிவினைதான்! பிரிவினை தான்! பிரிவினைதான்!!! முக்காலும் முடிவு ஆக வேண்டியது ஆகும்.

நான் இன்று பிரிவினை கேட்கவில்லை. கேட்கிறேன் என்றால் நிபந்தனை இல்லாமல் கேட்கவில்லை. *(விடுதலை 23-11-1973. எஸ்.வி.ஆர். எழுதி தமிழ் முழக்கம் வெளியீடாக வந்துள்ள 'பெரியார் மரபும் திரியும்' நூல். பக் : 270, 271)*

என்பது அவரது இறுதிக் கூற்றுகளில் ஒன்று. தேசம் என்பதைப் பிரதானப்படுத்தாமல், தேசம் குறித்த எந்தப் பெருங்கதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாடலிலும் சரணனடையாமல் தமது நோக்கத்தைப் பெரியார் வெளிப்படுத்தியுள்ளது கவனிக்கத்தக்கது.

'யார்தான் நிபந்தனை இல்லாமல் பிரிவினை கேட்கிறார்கள்?' எனச் சொல்லிப் பெரியாரை ஒரு தேசியவாதியாகக் காட்ட முயல்வதை நாம் ஏற்க இயலாது. அப்படியாயின் இன்று தமிழ்த் தேசப் பிரிவினை கோருவோர் முன்வைக்கும் நிபந்தனை யாது, அந்நிபந்தனை யாருடைய நலன் நோக்கி லானது, பெரியார் விதித்த நிபந்தனையை இவர்கள் ஏற்றுக் கொள்கின்றனரா என்று நாம் கேட்டாக வேண்டியுள்ளது. இந்து மதம் குறித்தெல்லாம் நாங்கள் இன்று பேச இயலாது என்கிற ரீதியில் பழ. நெடுமாறன் அவர்கள் கூறியுள்ளது இங்கே ஒப்பு நோக்கத் தக்கது. (பார்க்க: தலித் முரசு, ஜனவரி, 2000)

எனவே பெரியார் கோரியது பிரிவினையா இல்லையா என்கிற ரீதியில் பிரச்சினையை அணுகிச் 'சரியான பதிலை'த் தேடாமல் பெரியார் ஒரு தேசியவாதியா இல்லையா எனக் கேள்வி யையே நாம் மாற்றிப் போட வேண்டியுள்ளது. ஆய்வுச் சட்டகத்தையே புரட்டிப் போட வேண்டியிருக்கிறது. இப்படி மாற்றிப் போடுவதே பெரியாரின் பன்முகப் பரிமாணங்களை விளங்கிக் கொள்ளப் பயன்படும். புதிய சிந்தனை உசுப்பல் களுக்கும் வழி வகுக்கும்.

(பார்க்க. எஸ்.வி.ஆரின் முன் குறிப்பிட்ட நூல். ராஜதுரைக்கும் திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அவர்களுக்குமிடையிலான விவாதத்தைத் தோழர்கள் கவனமாகப் படிக்க வேண்டுகிறேன்.)

SEELAN BOOKS
NORWAY
SIGNATURE



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 6

# பகுத்தறிவு, ஒழுக்கம், தியாகம், பொது நன்மை, பொது நோக்கு... எல்லாமே வெங்காயங்கள்தாம்!

பெருங்கதையாடல்கள் எதையுமே பெரியார் உருவாக்க வில்லை என எப்படிச் சொல்வது, 'பகுத்தறிவு' என்கிற பெருங்கதையாடலை அவர் முன்வைக்கவில்லையா? - என்கிற கேள்வி எழலாம்.

> பகுத்தறிவு என்பது மனிதனுக்கு ஜீவநாடி உயிர்நாடி ஆகும். ஜீவராசிகளில் மனிதனுக்கு மட்டுந்தான் பகுத்தறிவு உண்டு. இதில் எவ்வளவுக்கெவ்வளவு தாழ்ந்த நிலையில் இருக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு காட்டுமிராண்டி என்பது பொருள். *(ஆ.தொ.பக்:1129)*

என்று பகுத்தறிவின் புகழ் பாடியவர் அவர். பகுத்தறிவாளர் கழகங்களை அமைப்பது திராவிட கழகச் செயற்பாடுகளில் ஒன்றாக இருந்தது. ஆனால் மதத்தின் ஆட்சி என்பதற்குப் பதிலாக பகுத்தறிவுப் பார்வை என்கிற அளவில்தான் அவரது இந்தச் சொல்லாடல்கள் அமைந்தன.

தமிழைக் காட்டுமிராண்டிமொழி என அவர் சொன்னது கூட இந்தப் பொருளில்தான். மதத்திலிருந்து பிரிக்கப்படாதது என்கிற வகையில் தமிழ், பகுத்தறிவில் தாழ்ந்த நிலையில் உள்ளது. எனவே அது காட்டுமிராண்டி மொழி, அவ்வளவு தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எல்லாப் பிரச்சினைகளுக்கும் எல்லா மக்களுக்கும் எல்லாக் காலங்களுக்குமான முரணற்ற தீர்வாக அவர் பகுத்தறிவு உட்பட எதையும் முன்வைக்கவில்லை. முற்றுண்மையான (Absolutes) வரையறைகளை உருவாக்குதல், முழுமையான கோட்பாட்டு உருவாக்கங்களைச் செய்தல் என்பதற்கு அவர் தொடர்ச்சியாக எதிராகவே இருந்தார். அவரது கட்ட விழ்ப்பிற்குப் பகுத்தறிவும் தப்பவில்லை.* பகுத்தறிவு மற்றும் மனித ஜீவிகள் குறித்த அவரது கீழ்க்கண்ட மதிப்பீடுகள் இதனைத் தெளிவாக்கும்.

> ஆகாரம், நித்திரை, ஆண்-பெண் சேர்க்கை ஆகிய தேவைகளில் மற்ற ஜீவன்களிடம் உள்ள தேவைகளே மனிதனிடமும் காணப்படுகின்றன. இன்னும் பேசப் போனால் மற்ற ஜீவன்களையும் விட அதிகமாகவும் காணப்படுகின்றன. அதிருப்தி என்ற கெட்ட குணம் மனிதனிடமே அதிகமாக இருக்கிறது. வேலை என்ற கெட்ட குணமும் மனிதனுக்கே அதிகமாய் உண்டு. தன்

---

* எல்லாக் காலங்களுக்கும் எல்லா மக்களுக்குமான பொதுப் பார்வையை *Universalism* என்பர். இதற்கு நேரெதிராக எல்லாவற்றையுமே சார்பாகப் பார்ப்பது *Relativism*. ஆனால் *Relativism*த்தில் எல்லாம் சார்பானவையே என்னும் கருத்து *Universal* ஆக முன் வைக்கப்படுவது ஒரு முரண்பாடு. எனவே இவற்றிற்கு மாற்றாக நீட்ஷே, ஃபூக்கோ முதலானோரின் பார்வைகளை *Fallibilism, Perspectivism* முதலான கருத்தாக்கங்களில் குறிப்பிடுவர். எல்லாப் பார்வைகளும் தவறுகளுக்குச் சாத்தியமானவை *(Fallible)*. எல்லா உண்மைகளும் அவரவர் பார்வையில் சொல்லப்படும் வெறும் விளக்கங்களே. (விளக்கங்கள் குறித்த இந்த விளக்கம் உட்பட) என்கிற புரிதலோடு இங்கே பிரச்சினைகள் அணுகப்படுகின்றன. என்னைப் பொறுத்த வரையில் இது சரி. இந்த அடிப்படையில் நான் இன்று செயல்படுவேன், போராடுவேன். ஆனால் இது தவறாவதற்கான சாத்தியங்களை நான் உணர்வது மட்டுமல்ல இன்னொருவருக்கு இது சரியாக இருக்க வேண்டியதில்லை என்கிற புரிதலோடும் என் செயற்பாடுகள் அமையும். பெரியார் சிந்தனைகளில் இந்நிலை ஊடாடி நிற்பதை ஒருவர் விளங்கிக் கொள்ள இயலும். இது குறித்து மேலும் விளக்கம் பெற ஆர்வமும் அக்கறையும் உடையோர் *Nietsche, Focault* முதலியோரைப் பயிலலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இனத்தை அடிமைப்படுத்தி அதைக் கொடுமைப்படுத்தி வாழும் கெட்ட குணமும் மனித ஜீவனிடத்திலேயே அதிகமாய் இருந்து வருகின்றது.... தனக்குத் தெரியாததையும் புரியாததையும் பற்றி நம்புதல், பேசுதல், நம்பச் செய்தல் முதலிய 'மூடத் தன்மைக் குணம்' மனித ஜீவனிடத்தல் அதிகமாய் இருந்து வருகிறது... இது போன்ற எத்தனையோ கெட்ட குணங்கள் மனித ஜீவன் தனது பகுத்தறிவின் பயனாகவே உடையதாக இருக்கிறது. ஆகையால் பகுத்தறிவின் மேன்மையால் மனித ஜீவன் சிறந்தது என்று எப்படிச் சொல்லிச் செல்ல முடியும்? (ஆ.தொ.பக் : 1132-33)

என்று கேட்பவர் மற்றோரிடத்தில்,

தன் பிள்ளை, குட்டி, பேத்து, பிதிர் ஆகிய பின் சந்ததிகளைப் பற்றிய முட்டாள்தனமான கவலை பகுத்தறிவுள்ள மனிதனுக்குத்தான் இருக்கிறதேயொழிய பகுத்தறிவில்லாதவைகளுக்கு இல்லை.... பகுத்தறி வில்லாத எந்த ஜீவராசியும் தன் இனத்தை வருத்தி வாழ்வதில்லை; தன்இனத்தைக் கீழ்மைப் படுத்துவதில்லை;தன் இனத்தின் உழைப்பிலேயே வாழ்வதில்லை; தன் இனத்தின் மீது சவாரி செய்வதில்லை.

பகுத்தறிவுள்ள மனிதன் தன் இனத்தைக் கீழ்மைப் படுத்துகிறான். வாகனமாய் உபயோகப் படுத்துகிறான். சோம்பேறியாய் இருந்து தன்குலத்தின் உழைப்பிலேயே வாழ்கிறான். பாடுபட ஒரு கூட்டமாகவும் பயன் அனுபவிக்க இன்னொரு கூட்டமாகவும் பிரிந்து கொள்கிறான்.

உதாரணமாக நாய், கழுதை, பன்றி என்கின்ற 'இழிவான' மிருகக் கூட்டத்தில் பார்ப்பன சாதி, பறைசாதி, நாயுடு சாதி, முதலிசாதி என்கின்ற பிரிவுகள் கிடையா. ஆனால் மனித வர்க்கத்தில்தான் தன்இனத்தையே பிரித்து இழிவு படுத்தப்படுகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> மனிதன் மீது மனிதன் சவாரி செய்கிறான். மனிதன் உழைப்பை மனிதன் கொள்ளை கொள்கிறான். மனிதனை மனிதன் வஞ்சிக்கிறான். பகுத்தறிவின் பயன் இதுவாக இருக்கும்போது மனிதன் நேர்மையானவன் என்று எப்படிச் சொல்ல முடியும்? (ஆ.தொ.பக் : 1115)

என்று வினவுகிறார். மனித ஏற்றத் தாழ்வுகள் பகுத்தறிவின் மூலமே நியாயப்படுத்தப்படுகின்றன. பகுத்தறிவின் ஆட்சி நடைபெறுகிற மேலை நாடுகளும் இதற்கு விதிவிலக்கல்ல. வரலாற்றில் ஏற்றத்தாழ்வுகளையும் அதிகாரங்களையும், சுரண்டல்களையும் நியாயப்படுத்துகிற காரியத்தை அறிவும், தர்க்கமும் சிறப்பாகவே செய்து வந்துள்ளன; வருகின்றன. அறிவின் இந்த வன்முறையைப் பெரியார் விளங்காதவரல்லர்.

எதையும் பொதுமைப்படுத்த *(universalise)* இயலாது என்கிற புரிதலும் பெரியாருக்கு இருந்தது. ஒழுக்கம் பற்றிய அவரது சொல்லாடலில் இது வெளிப்படுவதைக் காண முடியும்.

கடவுளரின் ஒழுக்கக் கேடுகளை அவர் கண்டித்துள்ள விவரங்களை நாம் அறிவோம். நம்மிடத்தில் ஒழுக்கம் இருக்க வேண்டும். (ஆ.தொ.பக்:1085), 'ஒழுக்கக்கேட்டைக் களைந்தே ஆக வேண்டும்' (ஆ.தொ.பக்:1087) எனவும் குறிப்பிடும் அவரே பிறிதோரிடத்தில் பெண்களை நோக்கி 'ஆசைநாயகர்களை வைத்துக் கொள்ளுங்கள்' (ஆ.தொ.பக்:108) என்கிறார். மேலும்,

> உலகில் கற்பு, காதல் என்பன போன்ற வார்த்தைகள் எப்படிப் பெண்களை அடிமைப்படுத்தி அடக்கி ஆள வென்று ஏற்படுத்திப் பயன்படுத்தப்பட்டு வருகின்றனவோ அது போலவேதான் ஒழுக்கம் என்னும் வார்த்தையும் எளியோரையும் பாமர மக்களையும் ஏமாற்றி மற்றவர்கள் வாழப் பயன்படுத்தி வரும் ஒரு சூழ்ச்சி ஆயுதமேயல்லாமல், அதில் உண்மையோ சத்தோ ஒன்றுமே கிடையாது. கற்பு, காதல், சத்தியம், நீதி, ஒழுக்கம் என்பன எல்லாம் ஒரே தாயின் பிள்ளைகள். அதாவது குழந்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> களைப் பயமுறுத்தப் பெரியவர்கள் பூச்சாண்டி, பூச்சாண்டி என்பது போல் இவை எளியோரையும் பாமர மக்களையும் வலுத்தவர்களும், தந்திரக்காரர்களும் ஏமாற்றச் செய்த ஒரு பெரும் சூழ்ச்சியேயாகும். (ஆ.தொ.பக்: 1081-82).

என ஒழுக்கம் என்பதை ஒரு சூழ்ச்சியான கற்பிதமாகக் கண்டிக்கும் பெரியார், ஒழுக்கம் என்பது எவ்வாறு வெவ்வேறு மனிதர்களுக்கு வெவ்வேறு விதமாய்க் கட்டமைக்கப்படுகிறது என்பதை விரிவாக விளக்குகிறார்.

> தாசிக்கு ஒழுக்கம் ஒரு புருஷனையே நம்பி ஒருவனிடத்திலேயே காதலாய் இருக்கக் கூடாது என்பதாகும். குலஸ்திரீ என்பவளுக்கு ஒழுக்கம் அயோக்கியனானாலும் குஷ்டரோகியானாலும் அவனைத் தவிர வேறு ஒருவனை மனத்தில் கூடச் சிந்திக்கக் கூடாது என்பதாகும். இது போலவே முதலாளிக்கு ஒழுக்கம் எப்படி வேண்டுமானாலும் யாரையும் ஏமாற்றலாம் என்பதாகும். தொழிலாளிக்கு ஒழுக்கம் ஒரு வினாடி நேரம் கூட வேலை செய்யாமல் முதலாளிக்குத் துரோகம் செய்யலாகாது என்பதாகும். இந்துவுக்கு ஒழுக்கம் பசுவை இரட்சிக்க வேண்டியதாகும். முஸ்லிமுக்கு ஒழுக்கம் பசுவைப் புசிக்கலாம் என்பதாகும். (ஆ.தெப. பக்: 1081)

எனக் கூறுவதன் மூலம் வெவ்வேறு பிரிவினரின் நலன்களுக்கான ஒழுக்கங்களில் ஏதொன்றையும் பொது ஒழுக்கமாகப் பிரகடனப்படுத்துவது இயலாது என்கிறார். ஆனால் நடைமுறையில் இத்தகைய கருத்துகளைக் கொண்டிருப்பவர்கள்தான் பொது ஒழுக்கம் பற்றி வாய் கிழிவார்கள். ஒரு சமுதாய நல் வாழ்வுக்கு ஒழுக்கம் தேவையில்லையா என ஒரு நேர்காணலினூடாக கேட்கும் போது,

> என்ன நல்வாழ்வு? சமுதாயத்துக்கு என்ன நல்வாழ்வு வரும்? நீங்க பணக்காரன்! நான் ஏழை. இவங்களுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நல்வாழ்வு எங்கே வரும்? இதையெல்லாம் காப்பாத்து றதா இருந்தா அதைத்தான் ஒழுக்கம்னு நினைக்கிறோம். உங்க கிட்ட பணம் திருடக் கூடாது நான். நீங்க வியாபாரி, என்னை மோசம் பண்ணி பணம் சேர்த்துடலாம்னு நினைக்கிறீங்க. அப்ப எப்படி ஒழுக்கம் வரும்? *(ஆ.தொ.பக்: 1218)*

என்று பெரியார் திருப்பிக் கேட்கிறார். மொத்தத்தில்,

இதனால் சுயநலத்தையே பிரதானமாகக் கருதிக் கற்பித்துக் கொண்ட ஒழுக்கங்களை உடைத்தெறிவது சுயமரியாதைக் காரர்கள் கடமை என்பது விளங்கும்

என்று அடித்துச் சொல்கிறார்.

பொதுப் புத்தியில் ஒழுக்கம் என்பது உடல் சார்ந்த இச்சை களைக் கட்டுப்படுத்துதல் என்கிற ரீதியில் பொருள் கொள்ளப் படுவது நமக்குத் தெரியும். உடல் சார்ந்த இச்சைகளை ஒழுக்கக்கேடு எனப் பெரியார் கூறுவதில்லை. ''உணர்ச்சியும் இந்திரியச் செயலும், ஆசையும் ஜீவ சுபாவம்'' என்பதோடு, ''பசி, நித்திரை, புணர்ச்சி, மூன்றும் முக்கிய இயற்கை அனுபவம்'' என்கிறார். (ஆ.தொ.பக்: 173). ஆசையை ஜீவ சுபாவம் என அவர் ஏற்றுக் கொள்வது சிந்திக்கத்தக்கது. எனில், ஒரு பக்கம் ஒழுக்கங்களை உடைத்தெறிய வேண்டும் எனச் சொல்லிவிட்டு, 'ஆசையை ஜீவ சுபாவம்' என அனுமதித்து விட்டு,

மனிதனுக்கு ஒழுக்கத்தைப் பரப்ப வேண்டும்
ஒழுக்கம் பக்தியை விட முதன்மையானது (ஆ.தொ.பக்: *1084-85).*

என்றெல்லாம் பெரியார் சொல்வதன் பொருளென்ன?

இங்குத்தான் பெரியாரைப் புரிந்து கொள்ள வேண்டும். எல்லாருக்கும் எல்லாக் காலத்துக்குமான பேரொழுக்கங் களையும் , பேரறங்களையும்தாம் பெரியார் மறுக்கிறாரே யொழிய தமக்கும் மற்றதற்குமிடையேயான அறங்களை -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுயேச்சை அறங்களை *Local Ethics* - அவர் மறுக்கவில்லை. நான் உங்கள் வீட்டிற்கு வருகின்றேன். நீங்கள் எனக்குத் தேநீர் தருகிறீர்கள். அதில் விஷம் கலக்கப்படவில்லை என்ற நம்பிக்கையும் கலக்கக்கூடாது என்கிற அறமும் நம்மிடையே செயல்படுகின்றன. பேரறங்களை மறுப்பவர்களின் நோக்கம் இந்தச் சிற்றறங்களை மறுப்பதல்ல.

> ஒருவன் மற்றவன் தன்னிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறானோ அதைப் போன்றே அவனும் மற்றவர்களிடம் நடந்து கொள்வதுதான் ஒழுக்கமாகும். (ஆ.தொ.பக்: 1084)

என்பது தான் பெரியாரின் ஒழுக்கம் பற்றி வரையறை. ஏதொன்றையும் சுட்டிக் காட்டுவது அல்லது அதைச் செய் யாதே, இதைச் செய்யாதே என எதிர்மறைப் போதங்கள் செய்வது என்றில்லாமல் பல்வேறு விதமான தூலமான சாத்தியங்களுக்கும் இடமளிப்பதாக இந்த வரையறை அமைந்திருப்பது கவனிக்கத்தக்கது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், வரையறை குறித்த வரையறைகளையே இங்கு அவர் மீறுகிறார்.

கற்பு பற்றிச் சொல்ல வரும்போது அவரது இப்பார்வை துல்லியமாக வெளிப்படுகிறது. குறிப்பான சூழலுக்குத் தகுந்தவாறே கற்பொழுக்கம் அமைய வேண்டும். இதை அவர் 'சுயேச்சைக் கற்பு' என்பார். பேரறங்களும், பெருங் கதையாடல்களும் முன்வைக்கிற கற்பை அவர் 'நிர்பந்தக் கற்பு' என வேறுபடுத்திக் காட்டுவார்.

> உண்மையாகப் பெண்கள் விடுதலை அடைய வேண்டு மானால் 'ஒரு பிறப்புக்கொரு நீதி' வழங்கும் நிர்ப்பந்தக் கற்பு முறை ஒழிந்து 'இரு பிறப்புக்கும் சமமான சுயேச்சைக் கற்பு முறை' ஏற்பட வேண்டும். கற்புக்காகப் பிரியமற்ற இடத்தைக் கட்டி அழுது கொண்டிருக்கச் செய்யும்படியான நிர்ப்பந்தக் கலியாணங்கள் ஒழிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேண்டும். கற்புக்காகப் புருஷனின் மிருகச் செயலைப் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டுமென்ற கொடுமை யான மதங்கள், சட்டங்கள் மறைய வேண்டும். கற்புக்காக மனத்துள் தோன்றும் உண்மையன்பை, காதலை மறைத் துக் கொண்டு, காதலும் அன்புமில்லாதவனுடன் இருக்க வேண்டுமென்ற சமூகக் கொடுமையும் அழிய வேண்டும். *(ஆ.தொ.பக்: 117).*

என்கிற கூற்றுக்கு விரிவான விளக்கம் தேவையில்லை. பொது அறம் என்பதற்குப் பதிலாக அவர் முன்வைக்கும் சுயேச்சை அறம் என்கிற சிந்தனை ஆழ்ந்த தத்துவப் பரிமாணங்கள் கொண்டது.

தனித்துவங்களை மறுக்கிற பொதுத்தன்மை என்கிற கருத்தாக் கத்தை அவர் தொடர்ந்து மறுத்து வந்தார். தன்னைப் பற்றிச் சொல்ல வரும் போதுகூட தாம் பொது நன்மையின் பேரால் தொண்டு செய்ய வரவில்லை *(ஆ.தொ. பக்:77)* என்று சொல்லிக் கொண்டார். பொதுநலம், பொதுத் தொண்டு, பொதுநல உணர்ச்சி முதலியவற்றையும் அவர் கேலி செய்தார். *(ஆ.தொ.பக்: 1137-1141).* எல்லாவற்றிற்கும் அடிப்படை சுயநலமாகவே இருக்கும் போது அவற்றைப் பொது நலம் என நம்ப வைப்பது யாரை ஏமாற்ற? மொழி பற்றிச் சொல்ல வரும்போது கூட ''மொழியானது சமுதாயத்திலுள்ள சூழ் நிலைக்கு ஏற்றது தானே யொழிய பொது வாழ்விற்கு, உணர்ச்சிக்கு ஏற்றதல்ல'' *(ஆ.தொ.பக்: 986)* என்றார்.

பொதுத்தன்மையை மறுப்பது என்பதன் பொருள் எல்லா வற்றையும் மறுத்துவிட்டு 'சும்மா' இருக்கும் செயலின் மையல்ல. தாராளவாதத்தின் *(Anarchism / Liberalism)* இன்னொரு பக்கம் தனக்கும் மற்றதுக்குமான அறத்தை மறுப்பதோ, செயலின்மையோ அல்ல. பெரியாரது வாழ்வும் நடைமுறைகளும் அரசியலுமே இதற்குச் சாட்சிகளாக அமைகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

''மொழி பற்றுக்குரியதல்ல'' எனச் சொல்வதென்பது மொழியை வெறுப்பதென்பது அல்ல. அதே போல ஒரு மொழியை விரும்புவதென்பதும் அது புனிதமானது, பழமையானது அல்லது தாய் மொழி என்பதற்காக அல்ல.

> நமது மேன்மைக்கு நமது தகுதிக்கு நமது முற்போக்குக்கு ஏற்ற மொழி - தமிழை விட மேலான மொழி இல்லை என்பதற்காகவே தமிழை விரும்புகிறேனே தவிர அது அற்புதங்களை விளைவிக்கக் கூடியது என்பதற்காக அல்ல... இது போலவே தாய் மொழி என்று பிடிவாதம் செய்வதும் அறியாமைதான் *(ஆ.தொ. பக்: 1969)*

என்று கூறிய அவர் இந்தி திணிக்கப்பட்ட போது அதை எதிர்த்துப் போராடத் தயங்காதவர் என்பதையும் மறந்து விடலாகாது.

அவரது வாழ்விலிருந்து ஒரு நிகழ்வை இங்குக் குறிப்பிடுவது பொருத்தம். இன்றைக்குச் சுமார் நூறாண்டுகளுக்கு முன்பு நடந்தது அது. அப்போது பெரியாருக்கு வயது இருபத்துநாலு. தந்தை வெங்கடப்ப நாயக்கரின் மண்டி வியாபாரத்தில் மகன் ராமசாமி பொறுப்பேற்றுக்கொண்டிருந்த காலம் அது. திருச்சியில் ஒரு வழக்கிற்காக வக்காலத்தில் தந்தையின் கையெழுத்தைப் போடுகிறார் ராமசாமி. இதையறிந்த எதிர் தரப்பு வழக்குரைஞர் அவர் சென்றவுடன் அவர் மீது 'போர்ஜரி' வழக்கு தொடுக்கிறார். தந்தையும் மகனும் பயந்து விடுகின்றனர். சேலம் விஜய ராகவாச்சாரி, நார்ட்டன் துரை முதலான அன்றைய புகழ் பெற்ற வழக்கறிஞர்களையெல்லாம் சென்று ஆலோசனை கேட்கின்றனர். 'கையெழுத்தை நான் போட வில்லை என ராமசாமி சொல்லி விடுவதுதான் ஒரே வழி. எதற்காக எங்களுக்கு வீணாகச் செலவு செய்கிறீர்கள்' என்று அவர்கள் வழக்காட மறுத்து விடுகின்றனர். ஆனால், தந்தையும் பிள்ளையும் இப்படிச் சொல்லத் தயாராக இல்லை. சிறைக்குச் செல்ல ராமசாமி தயாராகிறார். காப்பு, கொலுசு,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடுக்கன் முதலியவற்றைக் கழற்றுகிறார்; தாடி வளர்க்கிறார்; கள் உண்ணப் பழகுகிறார். வழக்கு நாளில் தந்தையும் மகனும் குற்றத்தை ஒப்புக் கொள்கின்றனர். வழக்கை விசாரித்த உதவி கலெக்டர் மேக்பர்லேண்ட், 'எதிரி யாரையும் மோசம் செய்ய இந்தக் காரியம் செய்யவில்லை, வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது' எனத் தீர்ப்பளிக்கிறார்.

இந்தச் சம்பவத்தைப் பெரியார் 'விடுதலை' வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள (26-7-1952) நேர்ந்ததன் பின்னணியும் சொல்லப்பட வேண்டிய ஒன்று. நடக்க இருந்த இந்தி எழுத்து அழிப்புப் போராட்டம் ஒன்றில் பங்கெடுக்க இருப்பவர்களின் பெயர்ப் பட்டியலை அவர் 'விடுதலை'யில் வெளியிட்ட போது சிலர் அதை விமர்சித்தனர். பெயர்களைக் கொண்டு போராட்டக்காரர்களைக் கைது செய்து விட்டால் பின் போராட்டம் நடப்பது எப்படி என்பது அவர்களின் கேள்வி. அதற்குப் பெரியார் சொல்வார்:

> எனது முப்பது வருஷப்பொதுத் தொண்டில் ஒரு செயல் கூட, ஒரு போராட்டம் கூட நான் மறைவாய் நடத்தினது கிடையாது. நடத்த அனுமதித்ததும் கிடையாது. என் மீது பொது வாழ்வில் சுமார் இருபது வழக்குகள் நடந்திருக்கும். என் சொந்த வாழ்விலும் சில வழக்குகள் நடந்திருக்கும். ஒன்றுக்கும் கூட நான் எதிர் வழக்காடி இருக்க மாட்டேன். ஒப்புக் கொள்ளவும் தயங்கியிருக்க மாட்டேன் *(ஆ.தொ.பக்:1817)*

என்று சொல்கிறபோதுதான் தமது இளமைக்கால அனுபவத்தை இப்படி விரிவாய்ச் சொல்லுகிறார். எல்லா அறங்களையும் ஒழுக்கங்களையும் போட்டுடைக்கச் சொன்ன அவர்தாம் சொந்த வாழ்விலும் அரசியலிலும் இத்தகைய அறத்தைக் கடைபிடிக்கவும் செய்கிறார். தண்டனை கிடைக்கும் எனத் தெரிந்தும் நீதி மன்றத்தில் பொய் சொல்லாததேன்? அரிச்சந்திரன் போல சத்தியம் தவறாதே என்கிற பேரறத்தை நிலை நாட்டவா? இல்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> இந்த என் நடத்தை கடவுளுக்காக மோட்சத்திற்காக சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டது அல்ல. நேர்மையை அடிப்படையாகக் கொண்டது *(ஆ.தொ. பக்:1819)*

என்பது பெரியாரின் பதில். சத்தியம் x நேர்மை என அவர் கட்டமைக்கும் முரணில் சத்தியம் என்பது பேரறம். நேர்மை என்பது நாம் குறிப்பிடுகிற சிற்றரம் - Local Ethics - சுயேச்சை அறம். சுயமரியாதைக்கும், சுய உறுதியாக்கத்திற்கும் விடுதலைக்குமான அறம். சற்றுப் பின் இதனை விரிவாய்ப் பார்ப்போம். இதற்கு முன் 'தியாகம்' பற்றிய பெரியாரின் சிந்தனையும் இங்கே குறிப்பிடப்படவேண்டிய ஒன்று. 'பித்தலாட்டமானது' / 'மானமற்றது' *(ஆ.தொ.பக்: 1145)* எனத் தியாகத்தைப் புறந்தள்ளும் பெரியார்,

> கடவுள் என்பதும் தியாகம் என்பதும் நிஷ்காமிய கர்மம் என்பதும் மோட்சம் - நரகம் என்பதும் பொருளற்றதும் விளக்க முடியாததுமான சொற்கள். *(ஆ.தொ.பக்: 1145)*

என்பார். தியாகங்கள் உட்பட எல்லாக் காரியங்களுமே மனிதனது சுய திருப்திக்காகவும் சுயநலத்திற்காகவுமே செய்யப்படுகின்றன. 'சுயநலம் இல்லாவிட்டால் மனிதன் ஒரு ஜீவனாகவே இருக்க முடியாது' (ஆ.தொ.ப: 1145). இப்படியிருக்க, தமது செயல்களைத் தியாகம் என முன் வைப்பது அதன் மூலம் ஒரு அதிகாரத்தைக் கட்டமைப் பதற்குத் தானேயொழிய வேறெதற்கும் அல்ல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 7

## பெரியார் பார்வையில் விடுதலை என்பதென்ன? பற்றறுத்தலின் எல்லை எது?

அய்ரோப்பியப் பயணம் முடிந்து வரும் வழியில் கொழும்பில் பெரியாருக்கு 'ஆதி திராவிட அபிவிருத்தி சங்கத்தார்' வரவேற்பளிக்கின்றனர். அங்கு அவர் 'தாழ்த்தப்பட்ட மக்கள் ஈடேற வழி' என்கிற தலைப்பில் பேசுகையில்,

> இதைப்பற்றி வியாக்கியானம் அதிகம் செய்ய வேண்டியதில்லை என்றே கருதுகிறேன். ஏனெனில் பாஷாபிமானம், தேசாபிமானம், மதாபிமானம், குலாபிமானம் என்பவைகளின் உட்கருத்தை ஊன்றிக் கவனித்தால் தாழ்த்தப்பட்ட மக்கள் ஈடேறும் வழி தானாகவே தோன்றும். எப்படியெனில், குறிப்பிட்ட எந்த விதமான அபிமானத்தை எடுத்துக் கொண்டபோதிலும் அநேகமாக அந்த அபிமானத்தின் பேரால் ஏமாற்றுகளே நடைபெறுகின்றன. தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர்களாக உள்ளவர்கள் இவற்றை ஊன்றிக் கவனித்து, அலசிப் பார்த்து, உரை கல்லில் வைத்து உரசிப் பார்க்க வேண்டும். அவ்வாறு அவர்கள் பார்ப்பார்களேயானால் வாஸ்தவத்திலேயே தாழ்த்தப் பட்டவர்கள் ஈடேறும் வழியை எளிதில் கண்டு கொள்வதற்கு ஏதுகரமாகவிருக்கும். மக்களது முன்னேற்றத்திற்கு தடைக் கல்லாகவிருக்கும் காரியங்கள் ஏதுவுண்டோ அவைகளைத் தகர்த்தெறிய வேண்டும் (ஆ.தொ.பக்: 75). என்பார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆக தாழ்த்தப்பட்டவர்கள் விடுதலை பெறுவதற்கு பாஷை, தேசம், மதம், குலம் ஆகியவற்றின் மீதான அபிமானங்களைத் தகர்த்தெறிய வேண்டும். 'கடவுள் மதம், ஜாதியம், தேசியம், தேசாபிமானம்' என்பதெல்லாம் இயற்கையான உணர்ச்சிகள் அல்ல எனச்சொன்ன அதே கால கட்டத்தில் (1932) சொல்லப் பட்ட கருத்துதான் இதுவும்.* இராசிபுரத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் பேசும் போது 'தேசாபிமானம் என்ற யோக்கியமற்ற சூழ்ச்சியை விட்டு விட வேண்டும்' என அவர் வெளிப்படையாகக் கூறியதை முன்பே பார்த்தோம். மொத்தத்தில் மொழி, நாடு, மதம், ஜாதி ஆகியவற்றின் மீதான பற்றுகளை அழிப்பது ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக் கான வழி எனப் பெரியார் கருதியது விளங்குகிறது.

பற்றுகளை விட்டொழித்தலே விடுதலை என்பது மரபு வழிப்பட்ட கருத்துதான். எல்லாவற்றிலும் மரபைக் கவிழ்க் கும் பெரியார் இங்கே மரபோடு ஒத்திசைகிறாரா? விடுதலை பெற வேண்டுமெனில் அறுக்கப்பட வேண்டிய பற்றுகள் என மரபு எவற்றையெல்லாம் முன் வைக்கிறது என யோசித்தால் இந்தக் கேள்விக்கு விடை கிடைக்கும். முதலில் நீ உன் மீதான பற்றை, உன் அகந்தையை, அகங்காரத்தை அழிக்க வேண்டும். அப்புறம் காமம், குடும்பம், சொத்து, புகழ், அதிகாரம் முதலானவற்றின் மீதான பற்றுகளை அழிக்க வேண்டும். இப்படி எல்லாப் பற்றுகளையும் அழிக்கச் சொல்லுகிற மரபு

---

* 'Nationalism' என்கிற சொல்லை 'ஜாதீய அறிவு' என மொழியாக்கிய பா தியார் 'நாட்டினுடைய ஷேம லாபமே தன்னுடைய லாபம்' எனக் கருதுவதே தேச பக்தியென அதற்கு விளக்கமளித்தார். 'தேசத்தைக் காத்தல் செய்' என்ப து அவரது ஆத்திச் சூடி. ''ஸ்வதேசாபிமானமும் ஸ்வ பாஷாபிமானமும் இல் லாத காகத்தை ஒரு காகம் என்று சொல்லுதல் தகுமோ? அதைப் பறந்து திரி யும் கரும் சிறு பிணமென்றுதான் சொல்ல வேண்டும்'' என்று கதை எழுதி னார். தேசப்பற்று குறித்தும் மொழிப்பற்று குறித்தும் இத்தகைய கதையாடல் கள் செயல்பட்ட நிலையில்தான் பெரியார் தேசாபிமானத்தையும், பாஷாபி மானத்தையும் கண்டிக்கிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு பற்றை மட்டும் சிக்கெனப் பற்றச் சொல்லும். அதுதான் இறைப்பற்று, கடவுள் பற்று, மதப்பற்று.

ஆனால் பெரியார் மறுக்கச் சொல்லும் பற்றுகளில் தலையாயது மதப்பற்று என்பதை நாம் அறிவோம். தவிரவும், நாட்டுப் பற்று, மொழிப்பற்று, என்பவற்றைத் துறப்பதுபற்றி யெல்லாம் மரபு வாய் திறப்பதில்லை. சொல்லப்போனால் 'தென்னாடுடைய சிவனே போற்றி' எனவும் 'ஆரியங் கண்டாய் தமிழுங் கண்டாய்' எனவும் மதப்பற்றினூடாக நாட்டுப் பற்று, மொழிப்பற்று, ஆகியவற்றைப் பதிப்பதே மரபின் பணியாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் பெரியாரோ இந்தப் பற்றுகளை அழிப்பதென்பதை அடித்தட்டு மக்களின் விடுதலைக்கான நிபந்தனையாக்குகிறார். எனவே பற்றறுத்தல் என்பதிலும் பெரியார் மரபைக் கவிழ்க்கவே செய்கிறார்.

மொழிப்பற்று, நாட்டுப் பற்று, மதப்பற்று, சாதிப்பற்று ஆகியவற்றை விட்டொழிக்கச் சொல்லும் பெரியார் விடு தலைக்கு மிகவும் அவசியமான பற்றாக ஒன்றே ஒன்றை மட்டும் குறிப்பிடுகிறார்,

> உங்களுக்கு இன்று சுயமரியாதை அபிமானந்தான்
> உண்மையாய் வேண்டும் *(ஆ.தொ.பக்: 68)*

என்று அவர் ராசிபுரத்தில் குறிப்பிட்டதை நாம் மறந்து விட இயலாது.

சுயமரியாதை - தன்மதிப்பு - சுயத்தை உறுதி செய்தல் என்கிற நீட்ஷேயியச் சிந்தனையுடன் பொருத்திப் பார்க்க வேண்டிய ஒன்று இது. சுயத்தை உறுதி செய்தல் என்பதென்ன- எத்தகைய புற வழிகாட்டல்களும், வெளி ஆணைகளும், தத்துவ வெளிச்சங்களுமின்றிச் சுய அனுபவம், சுய உணர்ச்சி, சுய சிந்தனை ஆகியவற்றின் அடிப்படையில் முடிவெடுப்பது, செயல்படுவது என்பது தான்.

> நான் ஒரு சுதந்திர மனிதன்; எனக்கு சுதந்திர நினைப்பு, சுதந்திர அனுபவம், சுதந்திர உணர்ச்சி உண்டு. அதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன். நீங்கள் என்னைப் போலவே உங்கள் சுதந்திர நினைப்பு, அனுபவம் உணர்ச்சி, ஆகியவைகளால் பரிசீலனை செய்து ஒப்பக் கூடியவற்றை ஒப்பி தள்ளக்கூடியவைகளைத் தள்ளி விடுங்கள் என்கிற நிபந்தனையின் பேரிலே தான் எதையும் தெரிவிக்கின்றேன். *(ஆ. தொ. பக்: 2026)*

என்கிற அவரது புகழ் பெற்ற கூற்றை நாம் அறிவோம். நாட்டுப்பற்று, மொழிப்பற்று, மதப்பற்று, சாதிப்பற்று, முதலியவை இத்தகைய சுய உறுதியாக்கத்துக்கு எதிரானவை, அடிமைப்படுத்துபவை. இந்த அடிமைத் தளைகளிலிருந்து மீளும் போதே ஒரு அடித்தள மனிதன் விடுதலை பெற முடியும். அடித்தள மனிதரைப் பொறுத்த மட்டில் மொழிப்பற்றையோ, நாட்டுப்பற்றையோ அவர் சுமப்பாரே யானால், அத்தகைய அரசின் விளிப்புகளுக்கு அவர் ஆட் படுவாரேயானால் இதர இழிவுகளை அவர் சகித்துக் கொள்ள வேண்டியிருக்கும். கட்சிப் பற்று, கொள்கைப் பற்று, ஒன்றுபட்ட வலிமை முதலான பெயர்களில் அவர் தமது பிற இழிவுகளை மறக்க வேண்டியிருக்கும்.

இதனை இன்று இன்னும் பல்வேறு தளங்களில் ஒடுக்கப்பட்ட மக்களிலிருந்து உதித்தெழுந்த சிந்தனையாளர்கள் முன் வைக்கின்றனர். இன்றைய உலகில் தலை சிறந்த திறனாய்வாளர்களில் ஒருவரும் கறுப்பினத்தைச் சேர்ந்த வருமான ஹென்றி லூயிஸ் கேட்ஸ் என்பார் இதனை இலக்கிய விமர்சனத்துக்குப் பொருத்துகிறார். எல்லா இலக்கியங் களுக்குமான பொது அழகியல் அளவுகோல்கள், விமர்சன மதிப்பீடுகள் கிடையாது என்கிறார். குறிப்பான பிரதிக்கான குறிப்பான விமர்சனம் என்கிற சிந்தனையை முன்வைக்கிறார். குறிப்பான இலக்கியங்களுக்காக உருவாக்கப்பட்ட அளவு கோல்களே இதுவரை பொதுவான அளவுகோல்களாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

முன்வைக்கப்பட்டுள்ளன என்பதையும் அவர் சுட்டிக் காட்டுகிறார். எனவே கருப்பு இலக்கியப் பிரதிகளுக்கு இந்தப் பொது அளவுகோல்கள் பொருந்தாது என்கிறார். எனவே, எத்தகைய முன் தீர்வுகளும் முன் முடிவுகளும், முன் அளவுகோல்களும் இன்றி பிரதிகளை அணுக வேண்டும் என்கிறார். அந்தப் பிரதிகளுக்கான குறிப்பான அணுகல் முறைகள் அந்தப் பிரதிகளிலிருந்தே உருவாக்கப்பட வேண்டும் என்கிறார். பிரதிகளுக்கான இந்தக் கூற்று இதர பிரச்சினைகளுக்கும் நிகழ்வுகளுக்கும் கூடப் பொருந்தும். முன் தீர்வுகள் இன்றி நாம் முடிவெடுக்கும் போதே நமது சுயம் உறுதி செய்யப்படுகிறது. வேறு யாரோ உருவாக்கிய அளவுகோல்களை நீ சுமந்து வரும்போது உன் சுயம், அகம் அழிகிறது. நீ அந்த அளவுகோல்களுக்கு மட்டுமின்றி அளவுகோல்களை உருவாக்கியவர்களுக்கும் அடிமை யாகிறாய்.

அடித்தள மக்களின் அரசியற் செயற்பாடுகளிலும் இதைக் காண முடியும். பொது அரசியல் நீரோட்டத்திலிருந்து பல சந்தர்ப்பங்களில் அவர்கள் விலகி நிற்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியிருப்பது புரியும். வெள்ளையர் ஆட்சியில் அய்.சி.எஸ் தேர்வுகள் லண்டனில் மட்டுமே நடைபெற்றுக் கொண்டிருந்த போது இந்திய நகரங்களிலும் அந்த தேர்வுகளை நடத்தினால்தான் பெருமளவில் இந்தியர் கள் பங்கு பெற முடியும் என்பது ஒரு பொதுக் கோரிக்கையாக, தேசியக் கோரிக்கையாக *(National consensus)* முன்வைக்கப் பட்ட போது தலித் மக்கள் அதை எதிர்த்ததை நாம்அறிவோம். அய்.சி.எஸ். தேர்வுகளை எழுத வாய்ப்புள்ள வர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் பார்ப்பனர் களாகவும் வேளாளர்களாகவும், முதலியார்களாகவும், இருக்கையில்

www.tamilarangam.net

அந்தக் கோரிக்கையை நாங்கள் ஏன் ஆதரிக்க வேண்டும், இரண்டாயிரமாண்டுகளாக அவர்களது ஆட்சியில் நாங்கள் பட்ட பாடுகள் போதாதா என்றெழும்பிய குரலை நாம்மறந்து விட முடியுமா? சுதந்திர நாளைத் துக்க நாளாகப் பெரியார் அறிவித்ததைத்தான் நாம் மறக்க முடியுமா?

எனவேதான் அந்த ராசிபுரம் கூட்டத்தில் தாழ்த்தப்பட்டவர் களை நோக்கிப் பெரியார், 'எந்தக் கட்சியிலும் நீங்கள் சேரக் கூடாது என்று சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்' என்றார் (ஆ.தொ.பக்: 68). எந்தக் கட்சியிலும் சேராதிருப்பது என்பது சும்மா இருப்பதோ, போராடாமல் இருப்பதோ அல்ல. ஒடுக்கப்பட்டவர்கள் தமது விடுதலைக்கு வேறு யாரையும் நம்பியிராமல் தானே போராட வேண்டியதன் முக்கியத் துவத்தை வலியுறுத்தியவர் அவர், ''எதற்கும் உங்கள் முயற்சி யும் சுய மரியாதை உணர்ச்சியும் இல்லாவிட்டால் ஒரு காரியமும் நடக்காது'' (ஆ.தொ.பக்:84) எனவும்,

> ஆகவே கீழ் சாதித் தன்மை ஒழிய வேண்டும் என்று கருதுகிற ஒருவன் அன்னியருக்காக (அதாவது பிற சாதியினருக்காக - அ. மா) நாம் உழைக்கப் பிறந்தோ மென்ற எண்ணத்தை விட்டுவிட்டு நமது உழைப்பின் பயனைச் சோம்பேறிகள், பாடுபடாத மக்கள் அனுப விக்கக்கூடாது என்கிற உறுதி கொண்டு - பிறவியில் நமக்கும் மற்றவருக்கும் எவ்வித வித்தியாசமுமில்லை என்கிற உறுதியோடு சோம்பேறிக் கூட்டத்திற்கு எதிராக எவன் போர்தொடுக்க முனைந்து நிற்கிறானோ அவனே இவ்வித இழிவுகளை நீக்கிக் கொள்ள அருகதை உள்ளவனாகிறான். (ஆ. தொ. பக்: 72).

எனவும் திட்டவட்டமாகச் சொன்னவர் அவர். ஆனால் இப்போராட்டம் வெளிக் கட்டளைகளையும், புற நம்பிக்கை களையும் துறந்ததாய் சுய மரியாதை அபிமானம் ஒன்றையே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடிப்படையாகக் கொண்டதாய் அமைய வேண்டும் என்பதுதான் பெரியார் சொல்லும் சேதி.

வெளி ஆணைகளை ஏற்றுச் செயல்படுவது என்பதற்கு அவர் தொடர்ச்சியாக எதிராகவே இருந்தார். தம்மைப் பற்றிச் சொல்ல வரும்போது கூட ''எனது சரித்திரத்தில் எனக்குத் தலைவனே இருந்ததில்லை'' என்றார். தொடர்ந்து,

> நான் சிறுவயது முதற்கொண்டே சுதந்திர எண்ண முடையவனாகவும் நான் சொல்கிறபடி மக்கள் நடக்க வேண்டுமென்ற உணர்ச்சியுடையவனாக வுமிருந்தே வாழ்ந்திருக்கிறேனேயொழிய மற்றவர் சொல்லுகிறபடி நடக்க வேண்டுமென்கிற எண்ண மற்றவனாகவே இருந்திருக்கிறேன். *(ஆ.தொ.பக்: 1963)*

என்று அவர் கூறியுள்ளதை மேலோட்டமாகப் படிக்காமல் ஆழமாகச் சிந்திப்பது அவசியம். 'போர்ஜரி' வழக்கிலிருந்து விடுபடுவதற்காகக் கூடப் பொய் சொல்ல மறுத்த கதையைச் சொல்லி முடிக்கும்போது,

> இந்த எனது நடத்தை கடவுளுக்காக, மோட்சத்திற்காக, சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டது அல்ல. நேர்மையை அடிப்படையாகக் கொண்டது என்பதுடன் நம்மை நாமே எண்ணிக் கொள்வதில் ஒரு பெருமை, ஒரு அகம்பாவம், எங்கும் எப்போதும் யாருடனும் பேசும் போது ஒரு துணிச்சல், தோல்வியிலும் ஒரு திருப்தி, மற்றவர்களுக்கும் ஒரு நேர்மை, ஒழுக்கம் பற்றிய வழிகாட்டிப் பிரச்சாரம். ஆதலால் 'மறைவாக ஒன்றும் செய்ய வேண்டாம்; எதையும் மறைக்காதே' என்றேன். சுருக்கமாகச் சொல்வேன் நேர்மையாக நடப்பது சுயநலமும் ஆகும். எனது பலக்குறைவினால் எத்தனையோ தவறுகள் ஏற்பட்டும் பொதுவாழ்வில் இந்த நாட்டில் நான் சாகாமல் இருப்பதற்கு இந்த நேர்மையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான் வைத்திருக்கும் ஜாக்கிரதைதான் காரணமாகும்.
*(ஆ.தொ.பக்: 1819)*

என்று அவர் கூறியுள்ளதை 'எனக்கு யாரும் தலைவன் கிடையாது. நான் சொல்கிறபடிதான் மற்றவர்கள் கேட்க வேண்டும்' என்கிற அவரது முந்தைய கூற்றுடன் இணைத்து வாசித்துக் கவனமாகப் பரிசீலித்தல் தகும். மேலோட்ட வாசிப்பில் இது ஆணவமாகவும் மக்களை மந்தைகளாய் நினைக்கும் திமிர்த்தனமாகவும் தோன்றக் கூடும். பெரியாரின் பிற கூற்றுக்களோடு இவற்றைப்பொருத்திப் பார்க்கும் போது தான் இவை சுய உறுதியின் வெளிப்பாடுகள் என்பது விளங்கும். 'எனக்குத் தலைவனே இல்லை' என்பதையும் 'நான் சொல்கிறபடிதான் பிறர் நடக்க வேண்டுமேயொழிய பிறர் சொல்கிறபடி நடக்கிற எண்ணமற்றவன் நான்' என்பதையும் அடிமைத் தன்னிலையை விட்டொழித்த விடுதலையடைந்த ஒரு மனிதனின் வெளிப்பாடாகவே நாம் கருத வேண்டும். நீட்ஷே, 'அடிமை அறம்' எனவும் 'ஆண்டான் அறம்' எனவும் பிரித்து அடிமை அறத்தை இகழ்கிற செயலுடன் இதை இணைத்துப் பார்த்தல் நலம். சுயேச்சையான அறம் அந்த அகத்தின் விளைவான அகம்பாவம், நன்மை/தீமை, வெற்றி/தோல்விகளைப் பற்றிய பேதமின்மை ('தோல்வியிலும் ஒரு திருப்தி') இதன் விளைவாக ஏற்படும் 'துணிச்சல்' இதுவே ஒரு மனிதனின் விடுதலை. சுய உறுதியின் அடையாளங்கள்.

இப்படி விடுதலை கொண்ட ஒரு மனம், எவனுக்கும் அடிமையாகாத ஒரு உள்ளம், யாரையும் அடிமையாக்கவும் முயலாது. யாரையும் ஆண்டானாக ஏற்காத ஒரு மனித ஜீவி யாருக்கும் ஆண்டானாகவும் இருக்க ஏலாது. எனக்கு யாரும் தலைவனில்லை, நான் சொல்கிறபடி மக்கள் நடக்க வேண்டுமென்ற உணர்ச்சியுள்ளவன் நான் என்று சொன்ன பெரியார்தான்,

சகோதரர்களே! நான் சொல்வன எல்லாம் எனது சொந்த அபிப்ராயங்கள்தாம் என்று சொல்வதோடு நான் ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> சாதாரண மனிதன் தான். நான் எவ்விதத் தன்மையும் பொருந்திய தீர்க்கதரிசியல்லன். ஆகையால் தனி மனிதன் என்கிற முறையில்தான் என்னுடைய அபிப்ராயங் களையும் – நான் பார்த்தும் ஆராய்ச்சி செய்தும் அனு பவத்தில் அறிந்ததுமானவைகளைத்தாம் - எதிலும் எனக்குச் சரி என்று பட்டதைத்தான் உரைக்கிறேன். 'ஒரு பெரியார் உரைத்து விட்டார்' என நீங்கள் கருதி அப்படியே கேட்டு நம்பி விடுவீர்களானால் அப்போது நீங்கள் யாவரும் அடிமைகளே!... யார் உரைப்பதையும் நாம் கேட்டு 'வேத வாக்கு' என்று நம்பி அப்படியே நடப்பதனால்தான் நாம் இன்று அடிமைகளாக இருக்கி றோம். ஆகவே நான் உரைப்பவைகளை ஆராய்ந்து பாருங்கள். உங்களுக்கு அவை உண்மையென்று தோன்றி னால் அவைகளை ஏற்றுக் கொள்ளுங்கள்; இல்லா விட்டால் தள்ளி விடுங்கள். *(ஆ.தோ.பக்: 2026)*

என்றும் *(1951)*,

> *நான் ஒரு அதிசயமான மனிதன்; மகான்! அப்படி இப்படி என்றெல்லாம் கூறுபவன் அல்லன்*

என்றும் *(1960)* சொல்லி வந்தார். மக்களை மந்தைகளாக்க நினைத்தவர் அல்லர் பெரியார் என்பது இக்கூற்றுக்களால் விளங்கும்.

ஆக பெரியாரின் விடுதலை, பற்றறுத்தல் முதலான சிந்த னைகள் சுய உறுதிப்பாடு *(Self-affirmation)* என்பதிலிருந்து எழுகின்றன. சுய உறுதி படைத்த தன்னிலைகளே தமது சமூகத்தை விடுதலை செய்யவும் முடியும். தனி மனித விடுதலையும் சமூக விடுதலையும் சந்திக்கும் புள்ளியும் இதுவே. சுய உறுதி பெறவேண்டுமானால் ஒருவர் எல்லா விதமான பற்றுகளையும், வழிகாட்டல்களையும், கொள்கை களையும் விடுதல் அவசியம். பெரியாரின் பார்வையில் கல்வியின் நோக்கம் கூட இத்தகையப் பற்றறுத்த தன்னிலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களை உருவாக்குவதே. கல்வி பற்றிச் சொல்ல வரும் போது,

> இந்த நாட்டில் இன்று கல்வியென்னும் பெயரால் பல கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து, பல்கலைக்கழகம், கல்லூரி, உயர் தரப் பள்ளி என்பதாகப் பல்லாயிரக் கணக்கான பள்ளிகளை வைத்துக் 'கல்வி' கற்பிப்பதை விட பகுத்தறிவுப் பள்ளிகள் மாத்திரம் வைத்து நிர்வாணமான சிந்தனா சக்தி தரும் படிப்பைக் கொடுத்து, மக்களை எதைப் பற்றியும் எந்தப் பற்றுமற்ற வகையில் செல்லும் வரை சிந்தித்து வரக் கற்பிப்போமானால்... *(ஆ.தொ.பக்:1323)*

என்று அவர் சொல்வார். 'நிர்வாணமான சிந்தனை', 'எதைப் பற்றியும் எந்தப்பற்றுமற்ற வகையில் செல்வதற்கான சிந்தனை' என்பவற்றை அவர் கல்வியின் நோக்கமாக முன் வைப்பது ஆழ்ந்த சிந்தனைக்குரியது. மாணிக்கவாசகர், தன்னை இறை/மதப் பற்றிலிருந்து விலக்கிச் செல்ல முயன்றவற்றை, 'ஈர்க்கிடை புகா இளமுலை மாதர் தம் கூர்த்த நயனக் கொள்ளை, மந்தக் களிறொத்த அவா' என்றெல்லாம் பட்டியலிட்டு வரும்போது 'கல்வி என்னும் பல் கடல் பிழைத்தும்' என்று கூறுவது இங்கே நினைவுக்கு வருகிறது. *உண்மையான கல்வி, மதப்பற்றை அறுத்து விடும் என மாணிக்கவாசகர் பதறியது இங்கே இணைத்துப் பார்க்கத் தக்கது.

---

* 'பிழை', 'தப்பு' ஆகிய சொற்களின்பால் தோழர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். இவை வினைச் சொற்களாகும் போது 'பிழைத்தல்' 'தப்புதல்' என்றாகின்றன. இவற்றிற்கு Survive/escape என்ற பொருள்களுள்ளது குறிப்பிடத் தக்கது. ஒரு சூழலில் தன்னை அமிழ்த்திக் கொள்பவர் அதனுள் கரைந்து போகிறார். அவரது சுயம் அழிகிறது. தனது சுயத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமெனில், அச்சூழலுக்கான விதிகளை, தர்க்கங்களை (Norms) அவர் மீற வேண்டும். அதாவது 'தப்பு' செய்ய வேண்டும். 'தப்பு' செய்பவரே தப்பிப்பர். 'பிழை' செய்பவரே பிழைப்பர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

SEELAN BOOKS NORWAY SIGNATURE

# 8

# விடுதலை: வெற்றி–தோல்வி, நன்மை–தீமைகளுக்கு அப்பால்...

தமது அரசியல் வாழ்க்கை முழுவதும் பற்றுகளை எதிர்த்தே இயங்கியவர் பெரியார். பற்றுகளின் அடிமைகளாய் மக்கள் வாழ்கிற சூழலில் இது எத்தனை துன்பகரமானது என்பதை விளக்க வேண்டியதில்லை. தமது 93ஆவது பிறந்த தினத்திற்காக வெளியிடப்பட்ட மலரில்,

> நான் சமுதாய சமத்துவத்திற்காகப் பாடுபடுகிற ஒரு தொண்டனாவேன். அதாவது சாதி அமைப்பை அடியோடு அழிக்கப் பாடுபடுவேன். சாதி அமைப்பு என்பது 'கடவுள், மதம்' மற்றும் அவைகள் சம்மந்தமான எதையும் ஒழித்தாக வேண்டும் என்று கருதி அவைகளை ஒழிக்கப் பாடுபடுவேன்... மக்களோ பெரும்பாலும் கடவுள் நம்பிக்கை உடையவர்கள் ஆவார்கள். கடவுள் ஒழிப்பு என்பது மக்களுக்கு ஆத்திரத்தையும், கோபத்தையும் உண்டாக்கக் கூடியது ஆகும். இது மாத்திரமல்ல நம்மைச் சபிக்கவும் கூடியது ஆகும். ஆகையால் சபிக்கப்பட்டும் வருகிறேன். (ஆ.தொ.பக்:1973).

என்று சாதிப்பற்றையும் மதப்பற்றையும் எதிர்த்து இயக்கம் நடத்துவதிலுள்ள இடர்ப்பாடுகளுக்காக மனம் நொந்து கொண்டார்.

அரசியல் கட்சிகளின் கிளர்ச்சிகளெல்லாம் ஏதேனும் ஒரு பற்றின் அடிப்படையில், அதன் விளைவான ஆதிக்கத்தைக் குறிக்கோளாகக் கொண்டே நடந்திருக்கின்றன. 1935ஆம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆண்டு காங்கிரஸ் கட்சியின் கிளர்ச்சிகளைப் பற்றிச் சொல்ல வரும்போது,

> எப்பேர்ப்பட்ட அரசியல் கிளர்ச்சியும் போர், மதம், வகுப்பு, சாதி ஆகியவைகளில் எதையாவது ஒன்றின் ஆதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நடந்திருக்கின்றன, நடைபெறுகின்றன என்றுதான் சொல்ல வேண்டு[redacted]ின் நன்மையைப் பொறுத்தும் விடுதலையைப் பொறுத்தும் நடப்பதாகச் சொல்வதற்கில்லை. *(ஆ.தொ.ப்க:454)*

என்று அவர் குறிப்பிட்டார். பெரியார் தொண்டர்களில் முதலானவர் எனச் சொல்லத் தக்க குத்தூசி குருசாமி,

> தேசியவாதி என்பவனுக்கு அடிப்படையான தத்துவத்திலேயே ஜனங்களுடைய ஆதரவைப் பெற்றுவிடக் கூடிய சௌகரியம் இருக்கிறது. அதாவது 'அன்னிய ராஜ்ஜி'யத்தைத் தொலைத்து விட்டு 'சுயராஜ்யம்' பெற வேண்டாமா – என்று லகுவாகக் கேட்டுவிட வேண்டியதுதான் தாமதம். ஜனங்கள் 'ஆம்' என்று தலையசைத்து விடுகிறார்கள். ஆனால் சமய சீர்திருத்தக்காரனோ 'நமது இந்து மதம், சமூகம் முதலியவற்றை அடியோடு புதுப்பிக்க வேண்டும்' என்று சொன்ன மாத்திரத்திலேயே நமது மக்களுக்கு அவன் மேல் கோபம் வந்து விடுவதோடு, 'ஆயிரக் கணக்கான வருஷங்களாய் இருந்து வந்ததையும் பெரியோர்கள் செய்து வைத்ததையும் அழிக்கவா பார்க்கிறாய்' என்று ஆவசேம் கொண்டு கத்துகிறார்கள்.

எனத் தேசப்பற்று, மதப்பற்று ஆகியவற்றின் அடிப்படையில் எவ்வளவு எளிதாக இயக்கங்கள் கட்டப்படுகின்றன என்பதை விளக்கிச் சொல்வார். இவர்களுக்கு மிக எளிதில் தேசபக்தர், தியாகி, மகாத்மா, அறிஞர், இனத் தலைவர் முதலான பட்டங்களும் பெருமைகளும் கிடைத்துவிடுகின்றன.

> ஆனால் சீர்திருத்தவாதியோ 'சமயத்துரோகி', 'நாத்திகன்', 'புரட்சிக்காரன்' என்ற பட்டங்களையும் அவதூறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> களையும் தூஷணைகளையும் பெற வேண்டியுள்ளது... எல்லா மக்களாலும் புறக்கணிக்கப்பட்டு 'ஜாதிப் பிரஷ்ட னாகி', 'ஜாதித் துரோகியாகி', 'மதத்துரோகியாகி' அவனுடைய ஆயுள் முழுவதும் சிறைச்சாலையை விடக் கொடுமையான ஒரு நிலையில் இருக்க வேண்டிய வனாகிறான். *(குருவிக்கரம்பை வேலு எழுதி வளவன் பதிப்பக வெளியீடாக வந்துள்ள 'குத்தூசி குருசாமி', பக் : 268)*

மதப்பற்று, சாதிப்பற்று, மொழிப்பற்று, நாட்டுப்பற்று என்கிற அடிப்படையில் இயக்கங்கள் கட்டுவதும், கிளர்ச்சிகள் நடத்துவதும் இன்றளவும் கூட எளிதாயிருக்கிறது. அரசின் எதிர்ப்புகள் இருந்தபோதும் மக்கள் மத்தியில் எளிதில் தியாகி, தலைவர் முதலான பெருமைகளையும், அதிகாரங்களையும், பொருளியற் பலன்களையும் பெற்றுவிட முடிகிறது. ஆனால் பற்றுகளை எதிர்த்து நிற்பவர், பேசுபவர் 'தூஷணக்காரன்', 'உடைப்புவாதி', 'தேசத்துரோகி', 'தமிழ்த் துரோகி' என்கிற பட்டங்களையே எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. எனில் வாழ்நாளெல்லாம் பாஷாபிமானம், தேசாபிமானம், மதாபி மானம், குலாபிமானம் ஆகியவற்றை எதிர்த்து நின்ற பெரி யாரின் பாடுகள் எத்தன்மையாக இருந்திருக்கும்? தமது இறுதிக் கால எழுத்துகளில் இது குறித்த மன உளைச்சல்களை அவர் வெளிப்படுத்துகிறார். ''பெரியாருக்கு என்ன குறை, நாங்கதான் அவரது கொள்கைகளை நடைமுறைப்படுத்தி விடுகிறோமே'' எனக் காமராசர் ஆறுதல் சொன்னபோது,

> எனக்கேதாவது குறை, கவலை இருக்குமானால் அது மக்களுக்கிடையில் காணப்படும் கவலையற்ற தன்மை யும் எதிரிகளின் சூழ்ச்சிக்கு ஆளாகும் தன்மையும் பற்றித்தான். *(88ஆவது பிறந்த நாள் மலரில், ஆ.தொ.பக்:1962)*

என்று சொன்ன பெரியார் தமது 90ஆம் ஆண்டு பிறந்த நாள் மலரில், ''பொதுவாக என் மனம் குழப்பமாக இருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துறவி ஆகி விடுவேனோ என்னமோ?'' (ஆ.தொ.பக்:1968) என்று கூட்க் குறிப்பிட்டார். *

எனினும் இவ்வாறு மக்களால் வெறுக்கப்பட்ட போதிலும் என்றும் விடுதலையை நேசிப்பவர் கடைசி வரைக்கும் மனதிற்பட்ட உண்மைகளைச் சொல்ல வேண்டியவர் களாகவே இருப்பர்; பற்றுகளை எதிர்த்து நிற்பதே அவர்களின் கடன். சொல்லப்போனால் அந்தச் செயற்பாடே அவர்களின் விடுதலையாக அமைகிறது. பெரியார் சொல்வார் :

> எனது சொந்த அனுபவங்களை நானறிந்து உங்களுக்கு உரைப்பதுதான் என்னுடைய விடுதலை. அதனை ஆராய்ந்து அறிந்து அதன்படி நடப்பதுதான் உங்கள் விடுதலை (ஆ.தொ.பக்:2026)

தாமறிந்து உரைப்பதே எப்படி விடுதலையாகிவிடும்? 'தேவைகள் பற்றிய பிரக்ஞை கொள்ளுதலே விடுதலை' என்பார் எங்கெல்ஸ். அதுபோல இங்கு சுய உறுதிப் பாட்டின்அடிப்படையில் உணர்தலும் அறிதலும் உரைப் பதுமே விடுதலையாகி விடுகின்றன.

அப்படிச் சொல்வது உடனடியாகத் தனக்குப் பலனைத் தருமா, இழப்பைத் தருமா? தனது முன்னேற்றத்திற்கு, புகழுக்கு வாய்ப்பாக அமையுமா? செல்வாக்குள்ளவர்களின் ஆதரவு நமக்குக் கிடைக்குமா, எதிர்ப்புகளைச் சம்பாதிக்க நேருமா?

---

* துறவியாவதில் பெரியாருக்கு இருந்த ஆசை எண்ணத்தக்கது. இள வயதில் தகப்பனாருடன் கோபித்துக் கொண்டு துறவியாகி வட நாடுகளில் திரிந்த கதையை நாம் அறிவோம். மனைவி நாகம்மை இறந்தபோது, ''2, 3 வருடங்களுக்கு முன்பிருந்தே நான் இனி இருக்கும் வாழ்நாள் முழுவதையும் சங்கராச்சாரிகள் போல – (அவ்வளவு ஆடம்பரத்துடனல்ல – பண வசூலுக் காக அல்ல) சஞ்சாரத்திலேயே, சுற்றுப் பயணத்திலேயே இருக்க வேண்டும் என்றும் நமக்கென்று தனி வீடோ குறிப்பிட்ட இடத்தில் நிரந்தர வாசமோ என்பது கூடாதென்றும் கருதி இருந்ததுண்டு. ஆனால் அதற்கு வேறு எவ்விதத் தடையும் இருந்திருக்கவில்லை என்றாலும் நாகம்மாள் பெரிய தடையாக இருந்தார். இப்போது அந்தத் தடை இல்லாமற்போனது ஒரு பெரிய மகிழ்ச்சிக்குரிய காரியமாகும்'' என்று எழுதினார் (ஆ.தொ.பக்:1918).



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெற்றியா, தோல்வியா என்கிற அச்சமும் தயக்கமும் உள்ளவன் விடுதலை அடைய முடியாது. தானறிந்ததை உரைப்பதன் மூலம் அவனுக்குத் தோல்வி கூடக் கிட்டலாம். சரி என அறிந்தும், உண்மை எனத் தெரிந்தும் சொல்லாமல் மவுனம் காப்பதன் மூலம் உடனடிப் பெருமை அடையலாம். புகழும், அதிகாரமும் கிடைக்கலாம். ஆனால் அது விடு தலையாக அமையாது. அடிமைத்தனத்தின் மற்றொரு வடிவமாகவே அது இருக்கும். அடிமையாய் உணர்ந்த மனத்திற்கு ஊக்கம் ஏது, ஆக்கம் ஏது? பெரியார் சொல்வார் :

> நான் ஒரு அதிசயமான மனிதன்; மகான்! அப்படி, இப்படி! என்றெல்லாம் கூறுபவன் அல்லன்; ஆனால் துணிவு உடையவன். கண்டதை ஆராய்ந்து, அறிந்ததைத் துணிந்து அப்படியே கூறுபவன். மற்றவர்கள் சுயநலத்திற்காக சுயநலத்துடன் பாடுபடுகிறார்கள். அந்தச் சுயநல உணர்ச்சி யுடையவர்கள் மக்கள் வெறுப்புக்கு ஆளாக மாட்டார்கள்; அப்படிப் பக்குவமாக நடந்து கொள்ளுவார்கள். நான் கண்டதை, அறிந்ததை மக்கள் எதிர்ப்புக்கு அஞ்சாது கூறினால் வெறுப்புத்தான் கிடைக்கும். சுயநலம் கெட்டுப் போகும். *(ஆ.தொ.பக்:2026)*

ஆனாலும் நீ விடுதலை பெற்றவனாய். 'தோல்வியிலும் ஒரு திருப்தி' எனச் சொன்னதன் பொருள் இதுவே*. உன் சுய நலத்தை உத்தேசித்து நீ துணிச்சலற்றவனாய் வாழ நேர்ந்தால் விடுதலையனுபவம் உனக்கில்லை.

பெரியாரின் பெருமைகள் சுயசிந்தனையும் சிந்தித்ததைச் சொன்ன துணிச்சலும் தான்.

---

* ''மனித வாழ்வில் வெற்றி என்னவென்றால் அவனவன் மனத் திருப்தியோடு வாழ்வதுதான்'' (ஆ.தொ.பக்:1144) என்று அவர் மற்றோ ரிடத்தில் குறிப்பிடுவார். சுய திருப்தியே வெற்றியாகும் போது, தோல்வியி லேயே சுயதிருப்தி கிட்டுமானால் தோல்வியே அந்தத் தன்னிலையின் வெற்றியாகிவிடுகிறது. எனவே விடுதலை என்பது வெற்றி தோல்விகளுக்கு அப்பாற்பட்டதாகி விடுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 9

## பெரியார்?

சிலோன் 'டெய்லி நியூஸ்' என்னும் பத்திரிகையின் சார்பாகப் பெரியாரிடம் பேட்டி ஒன்று காணப்பபட்டது. அப்போது அவர் சொன்னார்:

> நான் ஒரு நாத்திகனல்ல, தாராள எண்ணமுடையவன். நான் ஒரு தேசியவாதியுமல்ல; தேசாபிமானியுமல்ல; ஆனால் தீவிர ஜீவரக்ஷா எண்ண முடையவன். எனக்கு சாதி என்பதோ, சாதி என்பதன் பெயரால் கற்பிக்கப்படும் உயர்வு தாழ்வுகளோ கிடையாது. *(ஆ.தொ.பக்:1186).*

தம்மைத் தேசியவாதி என்று சொல்லிக் கொள்வதைக் காட்டிலும் தேசத்துரோகி எனச் சொல்லிக் கொள்வதில் பெரியார் ஆர்வமுடையவர் என்கிற சங்கதி நமக்குத் தெரியும். ஆனால் அவரை நாம் ஒரு நாத்திகனாகவே அறிந்துள்ளோம். எனினும் இங்கு தம்மை நாத்திகன் என்று சொல்லிக் கொள்வதைக் காட்டிலும் 'தாராள எண்ணமுடையவன்' என்று சொல்வது கவனத்திற்குரியது. தாராளவாதி – Liberal/Anarchist – எனத் தம்மைத் தாமே அவர் அடையாளப்படுத்திக் கொள்வது ஒரு முக்கியமான விஷயம். எனினும் பெரியாரை ஒரு கடவுள் மறுப்பாளராகவே அறிந்து வந்த நம்க்கு அவர் தம்மை நாத்திகனல்லன் என்று சொல்லிக் கொள்வது சற்று வியப்பளிக்கிறது. பெரியாரின் மரண சாசனம் எனச் சொல்லப் படுகிற இறுதிச் சொற்பொழிவில் (19-12-1973),

> கடவுள் சங்கதியை எடுத்தால் ஒருவனுக்கு ஒருவன் நம்பிக்கைக்காரனும் நம்பிக்கையில்லாதவனும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> அவனை இவன் முட்டாள் என்றுதான் சொல்லியாகணும். இவனை அவன் முட்டாள் என்று சொல்லித்தான் ஆகணும். *(ஆ.தொ.பக்:2062).*

> மக்களுக்கு ஆத்திகம், நாத்திகம் என்பதற்குப் பொருள் தெரிவதே இல்லை. நாத்திகன் என்று சொன்னால் கடவுள் இல்லை என்று சொல்கிறவன் அல்ல. நான் கடவுள் இல்லை என்று சொல்கிறவன் அல்ல; இருக்கிறது என்று ஒப்புக் கொள்ளவும் இல்லை. புராண இதிகாச வேத சாஸ்திரங்களை ஒப்புக்கொள்ளாதவர்களையே பார்ப்பனர் நாத்திகன் என்று குறிப்பிடுகின்றனர். *(ஆ.தொ.பக்:1100)*

என்று சொல்லி நாத்திகம் என்பதற்கு இங்கே என்ன பொருள் கொள்ளப்படுகிறது என்று விளக்குகிறார். எனவே வெறுமனே கடவுள் உண்டா இல்லையா என்பதல்ல பிரச்சினை. என்னால் கடவுள் என்பதென்ன, எப்படிப்பட்டது என்று புரிந்து கொள்ள இன்றைக்கும் முடியவில்லை. புரிந்து கொண்டிருப்பவராக கருதுகிறவரிடம் எனக்கு ஏன் சண்டை வேண்டும்'' (ஆ.தொ.பக்:1100) என்று சொன்னவர் பிறிதொரு சந்தர்ப்பத்தில் *(7-10-1974)*,

> ஆனால் ஆத்திக – நாத்திகம் என்பது ஒரு பயனற்ற பிரச்சினையாகும். மற்றும் அது அவனுடைய சொந்த புத்தி, யோசனையைப் பொறுத்ததாகும்.

> ஆதலால் நமது வாழ்வில் ஏற்பட வேண்டிய இன்ப துன்பங்களுக்கும், முற்போக்குக்கும் மாறுதலுக்கும், ஆத்திக, நாத்திகத்தைக் கொண்டு வந்து குறுக்கே போட்டுக் கொண்டு யாரும் கஷ்டப்பட வேண்டியதில்லை. *(ஆ.தொ.பக்: 1099).*

என்றும் கூறியவர் பெரியார். வாழ்க்கை நலன்களைக் கடவுளின் மேல் பொறுப்பேற்றி விட்டு மனிதன் வாளாவிருப்பதையும், பொருட்களைப் பாழாக்குவதையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொறுக்காமல்தான் இந்தக் கடவுள் விசயத்தில் பிரவேசிக்க வேண்டியிருக்கிறதேயொழிய மற்றபடி எவன் எத்தனை கடவுள்களை நினைத்துக் கொண்டிருந்தாலும் வணங்கினாலும் எனக்கு அக்கறையில்லை என்று ஒதுக்கியவர் அவர். எனவே. பெரியாரை வெறும் நாத்திகராகவும் கடவுள் மறுப்பாளராகவும் கடவுளை மறுப்பதற்கென்றே மறுத்து வந்தவராகவும், உலகப் பிரச்சினைகள் எல்லாவற்றையும் ஆத்திக–நாத்திக வெளிச்சத்தில் பார்த்தவராகவும் புரிந்து கொள்ள வேண்டியதில்லை. பெரியாரின் பரிமாணம் இன்னும் விசாலமானது; அவரை ஒரு நாத்திகன் என்பதைக் காட்டிலும் அவரே சொன்னபடி 'தாராளவாதி' எனச் சொல்வதே பொருத்தம்.

அவரது வாழ்வனுபவங்களும் அரசியல் செயற்பாடுகளும் இதற்குச் சாட்சியம் பகர்கின்றன. அவரது வெளிநாட்டுப் பயண அனுபவங்களிலும் கூட இது வெளிப்படுகிறது. அய்ரோப்பிய நாடுகளில் இருந்த போது அவர் நிர்வாண சங்கங்களோடு தொடர்பு கொண்டிருந்ததையும் அவற்றில் உறுப்பினரானதையும் இங்கே நினைத்துப் பார்த்தல் அவசியம். அவர்களோடு நிர்வாணமாக நின்று பெரியார் புகைப்படமும் எடுத்துக் கொண்டார். பிரிட்டனில் இருந்த போது அன்று கடுங் கண்காணிப்பிற்கு உள்ளாகியிருந்த கம்யூனிஸ்டுகளுடனும் தொழிற்சங்கத்தவர்களுடனுமே அவரது தொடர்புகள் இருந்தன. சோவியத் ரசியாவில் இருந்த போது அன்றைய ஸ்டாலின் அரசின் முக்கிய எதிர்ப்பாளர்களான ட்ராட்ஸ்கியர்களுடன் இவரது குழுவினர் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதற்காகவே நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டார் என்பதையும் நாம் மறந்து விடலாகாது. (பார்க்க: ஆனை முத்து பதிப்பித்துள்ள பெரியாரின் அயல்நாட்டுப் பயணக் குறிப்புகள்)

அவரது அரசியல் நடவடிக்கைகள் யாவும் அரசுக்குரிய விசுவாசமான குடிமக்களை உருவாக்குவதற்கு எதிராகவே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்தன. சுதந்திர நாள், குடியரசு நாள் முதலான தேசிய நாட்களை அவர் துக்க நாட்களாக அறிவித்தார். தேசப் படத்தையும், தேசீயக் கொடியையும் எரித்தார். அரசியல் சட்டத்தைக் கொளுத்தினார். உச்ச நீதி மன்றத் தீர்ப்பைப் பொசுக்கினார். உலகம் முழுவதும் கூர்ந்து கவனிக்கும் மகத்தான சம்பவத்தைத் துக்கநாளாக அறிவிப்பதா என்று அண்ணாவும், குமரன் காத்த கொடியை எரிப்பதா எனப் பொதுவுடைமைத் தோழர்களும், நேரு போன்ற பெருந் தலைவர்களும் கோபித்தபோது அவர்களைப் பெரியார் எள்ளி நகையாடினார். சர்வ சக்தி வாய்ந்த உன் பிள்ளையார் வெறும் ஒரு உருண்டைக் களிமண்தான் என்று காட்டத்தான் பிள்ளை யார் சிலையை உடைத்தேன், ஒரு முழம் அழுக்குக் கந்தல் துணிதான் உன் தேசியக் கொடி என்று நிறுவ அதைக் கொளுத்திக் காட்டுவேன் என்றார். மேலும்,

> உலகத்தையே படைத்தாகக் கூறப்படும் கடவுள்களே எங்களிடம் அகப்பட்டுத் திண்டாடும் நேரத்தில் உன் அரசாங்கக் கந்தல் துணிக் கொடி எம்மாத்திரம்? அதன் யோக்கியதை தெரியாதவர்கள் அதைத் தலையில் தூக்கிக் கொண்டு ஆடலாம். அதன் பித்தலாட்டம் தெரியாத மூடர்கள் அதைத் தாயின் மணிக்கொடி - புனிதத் தன்மை கொண்ட பாரத மாதாவின் கொடி என்றெல்லாம் புகழ லாம். அதன் யோக்கியதை தெரிந்த நாங்கள் மற்றவர் களுக்கும் அதை வெளிப்படுத்த முயற்சிக்கிறோம். தாயின் மணிக்கொடிக்குள்ள அந்தஸ்து கந்தல் துணிக்குள்ள அந்தஸ்து கூடகிடையாது என்ற உண்மையை வெளிப் படுத்துகிறோம். *(ஆ.தொ.பக்: 1840).*

என்று தேசீயக் குறியீடுகளையும் புனிதங்களையும் கடவுளர் சிலைகளையும் இழிவுபடுத்தினார். பிள்ளையார் சிலையை உடைத்தார். இராமன் படத்தை செருப்பால் அடித்தார். கம்ப இராமாயணத்தைக் கொளுத்தினார். 'அன்பே சிவம், சிவமே வெங்காயம்' என்று நகைத்ததோடு நிற்காமல் அந்த வெங்கா யத்தை உரித்தும் காட்டினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த எதிர்ப்புகளை எப்படிக் கையாள்வது என அரசுகள் திணறும் அளவிற்கு அவரது செயற்பாடுகள் அமைந்தன. பெரியாரிடமிருந்து பிரிந்து சென்ற அண்ணாவும் அவரருடைய தி.மு.க.வும் கடமை கண்ணியம் கட்டுப்பாடு மிக்க தேசீயக் குடிமக்களை உருவாக்கச் சிரத்தை காட்டிய அதே தருணத்தில், நமது பொதுவுடைமைத் தோழர்கள் கூட தேசீய சின்னங் களைத் தொழத் தயக்கம் காட்டாத பின்னணியில் பெரியாரின் இத்தகைய அராஜக (Anarchist), அரசவிழ்ப்பு நடவடிக்கைகள் ஏற்படுத்திய அதிர்ச்சியை ஊகித்துப் பார்க்கலாம். தமிழ் நாட்டுப் பிரிவினையை முன்வைத்துப் பெரியார் இயங்கிய போது கூட அவரது கிளர்ச்சிகள் யாவும் தேசீயக் குறியீடு களைத் தகர்ப்பதாகவும் தேசக் குடிமகன்/குடிமகள் என்கிற தன்னிலையை உடைப்பதாகவுமே இருந்தன.

பெரியாரது எதிர்க் கலாச்சார செயற்பாடுகள் குறித்து விரிவாக 'நிறப்பிரிகை'யில் பேசியுள்ளோம். (பார்க்க: நிறப்பிரிகை 6ஆவது இதழில் வெளிவந்துள்ள ராஜன் குறை எழுதிய கட்டுரை). இங்கே நடத்தப்பட வேண்டிய போராட்டம் கலாச்சாரத்தின் பேரால்தான் நடத்தப்படவேண்டும். கலாச்சாரத்தை எதிர்த்துத் தான் நடத்தப்படவேண்டும் என்பதில் பெரியார் தெளிவாக இருந்தார். இதற்குத் தமிழன் என்கிற அடையாளம் போதாது. தமிழன் என்கிற அடையாளத்தின் வழியாக இந்து என்கிற அடையாளம் நுழைந்து விடுகிறது என்பதை அவர் புரிந்திருந்தார்.

> தமிழ் என்பதும் 'தமிழர் கழகம்' என்பதும் மொழிப் போராட்டத்திற்குத்தான் பயன்படுமேயொழிய இனப் போராட்டத்திற்கோ, கலாச்சாரப் போராட்டத்திற்கோ சிறிதும் பயன்படாது.
>
> ...எனவே அக் கலாச்சாரத்திலிருந்து (அதாவது ஆரிய / இந்து / வருணாசிரம கலாச்சாரத்திலிருந்து - அ.மா) விடுபட வேண்டும் என்றால் மொழிப் போராட்டம் ஒன்றினால் மட்டுமே வெற்றிபெற முடியாது. கலாச் சாரத்தின் பேரால், இனத்தின் பேரால் போராட்டம் நடத்தப்பட வேண்டும். அதில் வெற்றி பெற வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்போதுதான் நாம் விடுதலை பெற்றவராவோம். மொழிப் போராட்டம் கலாச்சாரப் போராட்டத்தின் ஒரு பகுதிதானேயொழிய முழுப் போராட்டமாகவே ஆகிவிடாது. சட்டம், சாஸ்திரம், சமுதாயம், சம்பிரதாயப் பழக்க வழக்கங்கள், புராணங்கள், இதிகாசங்கள் இவை எல்லாவற்றிலுமே நம் இழிவு நிலைநிறுத்தப் பட்டிருக் கிறது. எனவே, இவை எல்லாவற்றிலுமிருந்துமே நம் இழிவு நீக்கமடைந்தாக வேண்டும். மொழியால் மேம்பாடும் வெற்றியும் பெற்று விடுவதா லேயே நம் இழிவும் நம் இழிவுக்கு ஆதாரமான கலாச்சாரமும் ஒழிந்துவிட மாட்டா. *(ஆ.தொ.பக்: 682, 683)*

என்று கலாச்சாரத் தளத்தில் நடத்தப்பட வேண்டிய போராட்டத்தின் முதன்மையை வலியுறுத்தினார். 'இனம்' என்று அவர் சொன்னாலும் கூட அதைக் கலாச்சார ரீதியாகவே அடையாளப்படுத்தினார். 'திராவிட' என்கிற அடையாளத்தை அவர் இறுக்கமாக வரையறுக்காமல் 'ஆரிய' என்பதற்கு எதிராகவே அதைக் கட்டமைத்தார். அவரது 'திராவிட' வரையறை ஆரியத்தை மட்டுமே விலக்கி மற்ற எல்லாரையும் முசுலிம்கள் உட்பட உள்ளடக்குவதாகவே இருந்தது. தம்மை இசுலாமை அனுசரிப்பவர் என்றும் திராவிட சமயமும் இசுலாமும் ஒன்று என்றும் அவர் சொல்லியுள்ளார். சேலம் மாநாட்டில் (1944) பேசும்போது, 'பாகிஸ்தானுக்குட்பட்டு வாழ்ந்தாலும் வாழலாமேயொழிய ஆரியருடன் வாழக் கூடாது' என்று அவர் கூறியது இங்கே குறிப்பிடத்தக்கது. பெரியார் எங்கும் இனத்தூய்மை பேசியவருமல்லர். தவிரவும், இனத் தூய்மை, இனத் தனித்துவம், இனப் பண்பு முதலான வற்றை நவீன மரபணுக் கோட்பாடுகள் (genome theories) திட்ட வட்டமாக மறுப்பதையும் நாம் இங்கே சிந்திக்க வேண்டும். எனவே எல்லாவற்றிற்கும், எல்லா இழிவுகட்கும் கலாச்சாரக் கட்டமைப்புகள் தான் அடிப்படையாக உள்ளன. என்பதிலும் அக்கலாச்சாரக் கட்டமைப்புகளைத் தகர்ப்பதிலும் பெரியார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குறியாய் இருந்தார். வாழ்நாள் முழுக்கக் கலாச்சாரப் போராளியாகவே திகழ்ந்தார்.

தம்மை ஒரு நாத்திகனல்லன், அதனினும் விசாலமான பரிமாணமுள்ள தாராளவாதி என்று சொன்னது போலத் தம்மை ஒரு சமுதாய சீர்திருத்தவாதி அல்லன் என்றும் அவர் சொல்லிக் கொண்டார். ஏன்?

ஏனெனில் சமுதாய சீர்திருத்தம் என்றால், ஏதோ இங்கும் அங்கும் ஆடிப்போன, சுவண்டுபோன, இடிந்து போன பாகங்களைச் சுரண்டி கூறுகுத்தி, மண்ணைக் குழைத்துச் சந்து பொந்துகளை அடைத்துப் பூசி மெழுகுவதுதான் என்று அநேகர் நினைத்திருக்கிறார்கள்.

ஆனால் நம்மைப்பொறுத்தவரை நாம் அம்மாதிரித் துறையில் உழைக்கும் ஒரு சமுதாய சீர்திருத்தக் காரனல்லன் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறோம். மற்றபடி நாம் யார் என்றால், என்ன காரணத்தினால் மக்கள் சமுதாயம் சீர்திருத்தப்பட வேண்டிய நிலைக்கு வந்தது என்பதை உணர்ந்து, உணர்ந்தபடி மறுபடி அந்நிலை ஏற்படாமலிருப்பதற்கு நம்மால் இயன்றதைச் செய்யும் முறையில் அடியோடு பேர்த்து அஸ்திவாரத்தையே புதுப்பிப்பது என்கின்றதான தொண்டை ஏற்றுக்கொண்டிருக்கிறபடியால், சமுதாய சீர்திருத்தம் என்பதைப் பற்றி மற்ற மக்கள் அனேகர் நினைத்திருந்ததற்கு நாம் மாறுபட்ட கொள்கைகளையும் திட்டத்தையும் செய்கையையும் உடையவராய்க் காணப்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

இதனாலேயேதான் பலவற்றில் உலக மக்கள் உண்டு என்பதை இல்லை என்றும், சரி என்பதைத் தப்பு என்றும், தேவை என்பதை தேவையில்லை என்றும், கெட்டது என்பதை நல்லது என்றும், காப்பாற்றப் படவேண்டியது என்பதை ஒழிக்க வேண்டும் என்றும் மற்றும் பலவாறாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாறுபட்ட அபிப்ராயங்களைக் கூறுவோராக, செய்வோராக காணப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றோம். ஆனால் நம் போன்ற இப்படிப் பட்டவர்கள் உலகில் நல்ல பெயர் சம்பாதிப்பதும், மதிக்கப்படுவதும், பழிக்கப்படாமல், குற்றம் சொல்லப் படாமல் இருப்பதும் அருமை என்பது மாத்திரம் நமக்கு நன்றாய்த் தெரியும். *(நிறப்பிரிகை - 6, பக்: 46).*

பெரியாரின் மேற்கண்ட இந்த விளக்கம் ஒழுக்கவிழ்ப்புவாதத்திற்கும் எதிர்க் கலாச்சாரத்திற்குமான ஒரு எளிய வரையறையாகவே திகழ்கிறது. ஒரு எதிர்க்கலாச்சாரவாதி பெரும்பான்மைப் போக்கு, பொதுப்புத்தி ஆகியவற்றிற்கு முற்றிலும் மாறுபட்ட கொள்கையும், திட்டமும், செய்கையும் உடையோராய் இருக்க வேண்டிய நிலையையும் அதன் விளைவாக எல்லாராலும் குற்றம் சொல்லப்படக்கூடிய, பழிக்கப்படக்கூடிய சூழலை எதிர் கொள்ள வேண்டியதையும் அவர் தெளிவாகவே உணர்ந்திருந்தார்.

நமது கடவுள், மதம், அரசாங்கம் மட்டுமல்ல மொழியும் இலக்கியமும் கூடத் தகர்க்கப்பட வேண்டியவை என்பதில் அவர் உறுதியாக இருந்தார். ஏனெனில்,

நம் கடவுள் – சாதி காப்பாற்றும் கடவுள்
நம் மதம் – சாதி காப்பாற்றும் மதம்
நம் அரசாங்கம் – சாதி காப்பாற்றும் அரசாங்கம்
நம் இலக்கியம் – சாதி காப்பாற்றும் இலக்கியம்
நம் மொழி – சாதி காப்பாற்றும் மொழி

இதை உயர்ந்த மொழி என்கிறார்கள். என்ன வெங்காய மொழி? இரண்டாயிரம் வருடங்களாக இருக்கிற தமிழ் மொழி, சாதியை ஒழிக்க என்ன செய்தது? மொழி மீது என்ன இருக்கிறது? ஏதோ மொழி மீது நம்முடைய பற்று; விவரம் தெரியாமல் சிலருக்குப் பற்று. எந்த இலக்கியம் சாதியை ஒழிக்கிறது? நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் –



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> வெங்காயம் என்று பாடியிருக்கிறான்; இந்த மடையனும் தினமும் படிக்கிறான். அது, முதல் பக்கத்தில் இருந்து கடைசிப் பக்கம் வரை சாதியைக் காப்பாற்றுவது தானே! அதை அனுசரித்துத்தானே புலவன் பாடியிருக்கிறான்! *(ஆ.தொ.பக்:9627)*

என வெகுண்டார். சிலப்பதிகாரமே அவர் சீற்றத்துக்குத் தப்பவில்லையெனில் நமது பெரியபுராணம், கம்ப இராம யணம், பக்தி இலக்கியங்கள் பற்றிச் சொல்ல வேண்டிய தில்லை. இன்றளவும் உயர் சாதி ஆதிக்கம் மிகுந்துள்ள தமிழ் இலக்கியச் சூழலிலும் சிற்றிதழ்ப் பாரம்பரியத்திலும் பெரியார் தீண்டப்படாதவராக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது சிந்திக்கத் தக்கது. தமிழ் மறுமலர்ச்சியின் அடையாளமாக இன்று உயர்த்திப் பிடிக்கப்படும் 'மணிக்கொடி' இதழ் அன்றைய சுய மரியாதை இயக்கத்தைக் கடுமையாகத் தாக்கி வந்ததும், 'சு.ம. காலிகள்' எனத் தொடர்ந்து திட்டி வந்ததும் இங்கே குறிப்பிடத்தக்கன. 'உதவாக்கரை இலக்கியங்கள்' எனப் பெரியார் சாடியது பண்டைய இலக்கியங்களுக்கு மட்டுமின்றி இன்றைய நமது 'மேற்'சாதி இலக்கியக் காரர்கள் பிதுக்கித் தள்ளும் பெரும்பாலான நவீன இலக்கியங்களுக்குங்கூட பொருந்துவதாகவே இருக்கிறது.

பெரியாரின் பெண்ணுரிமைச் சிந்தனைகள் விரிவாகவும் தனியாகவும் பேசப்பட வேண்டிய ஒன்று. மிகவும் அதி நவீனமான பெண்ணியச் சிந்தனைகளையெல்லாம் அறுபது எழுபது ஆண்டுகட்கு முன்பே உதிர்த்தவர் அவர். உடன் கட்டை ஏறுதல், பால்ய மணம் முதலானவற்றை எதிர்த்தும் பெண் கல்வியை ஆதரித்தும் இயங்கிய 'மேற்' சாதிச் சீர்திருத்தக் காரர்களாகிய ராஜாராம் மோகன் ராயர், வித்தியா சாகர், ரானடே போன்றோர் இந்தியச் சமூகம், இந்து மதம் ஆகியன பற்றி மிகவும் உயர்வான கருத்துக்களைக் கொண்டிருந்தனர். இவர்கள் சாதி இழிவுகளைப் பற்றியும் வருணாசிரமம் குறித்தும் கிஞ்சித்தும் கவலைப் படாதவர்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாறிவரும் சூழல்களுக்கேற்ப இந்துச் சமூகத்தையும், இந்துப் பெண்களையும் நவீனப்படுத்துவதாகவே இவர்களின் நோக்கம் இருந்தது. புதிய மாற்றங்களால் இந்துக் குடும்ப அமைப்பும் சமூக அமைப்பும் குலைந்துவிடாது பாதுகாப்ப தாகவே இருந்தது. எனவே இவர்கள் பெண்ணடிமைத் தனத்திற்கும், 'ஆண்மை' என்கிற கட்டமைப்பிற்கும், 'கற்பு' என்கிற கற்பிதத்திற்கும், குடும்ப அமைப்பிற்கும், இந்து மதத்திற்கும் உள்ள உறவுகளைப் பேசவில்லை. 'மேற்' சாதிச் சீர்திருத்தக் காரர்களிடையே மிகவும் தீவிரமாய்ச் சிந்தித்த வராகிய சுப்பிரமணிய பாரதியும் கூட இரு சாரர்க்கும் பொதுவான கற்பைப் பற்றித்தான் பேசினாரேயொழிய கற்பு என்பதையே கேள்விக் குள்ளாக்கவில்லை. பூலே, பெரியார் போன்றவர்களே சாதீயத்தையும் பெண்ணடிமைத் தனத்தையும் இணைத்து எதிர்த்தனர்.

பெரியார் ஒருவரே பெண் விடுதலை பெற வேண்டுமானால் ஆண்மை அழிய வேண்டும் என்றார். பெண்கள் பிள்ளை பெற்றுக் கொண்டிருக்கும் வரை அவர்களுக்கு விடுதலை இல்லை என்றார். பெண்கள் பிள்ளைப் பேற்றை நிறுத்தி விட்டால் மானுட விருத்தி என்னாவது என்கிற கேள்விக்கு அதைப்பற்றி உனக்கென்ன கவலை என்றார். கவலைப் பட்டால் அடிமையாக இரு. இந்த உலகம் மனித ஜீவராசிகளுக்கு மட்டுந்தானா? மற்ற ஜீவராசிகள் விருத்தியடைந்துவிட்டுப் போகட்டும். மனிதன் எந்த விதத்தில் மற்ற ஜீவராசிகளை விட உயர்வு?

ஆண்களுக்கு உத்தியோகம் கொடுக்கக் கூடாது என்றார். ஆயிரம் ரூபாய்க்கு மேல் சம்பளம் கொடுக்கக் கூடாது என்றார். ஆண் இரண்டு வைப்பாட்டிகள் வைத்துக் கொண்டானானால் நீங்கள் மூன்று ஆசை நாயகர்களை வைத்துக் கொள்ளுங்கள் என்றார். கணவன் இருக்க மற்றொரு ஆடவனை ஒரு பெண் விரும்பினாளானால் அதைக் குற்றமாகக் கருதக் கூடாது என மாநாட்டில் தீர்மானம் இயற்றினார். சுமார் எழுபது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆண்டுகட்டு முன்பே விதவைகள், விபச்சாரிகள் எனப் படுவோர், தனியாக வாழும் பெண்கள் ஆகியோர் மாநாட்டுக்கு அவசியம் வரவேண்டும் என அழைப்பு விடுத்தார். கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். இன்றளவும் கூட இது சாத்தியமா? பாலியல் தொழிலாளர் சங்கங்கள் எல்லாம் இன்று இயங்குகின்றன. பத்திரிகைகளில் செய்தி வருகின்றன. ஆனால் இவற்றிற்குச் சமூக அங்கீகாரம் உண்டா? நமது தொழிற்சங்கத் தோழர்கள் நடத்துகிற போராட்டம் ஒன்றில் வாழ்த்திப் பேசுவதற்கு பாலியல் தொழிலாளிகள் சங்கத் தலைவியை அழைப்பார்களா? மேலை நாடுகளில் கூட மிகச் சமீபத்தில்தான் தனியாக வாழும் பெண்கள் என்பார் ஒரு தனி வகையினமாக (category) ஏற்கப் படுகின்றனர். எழுபதாண்டு களுக்கு முன்பே பெரியார் இதனை நடைமுறைப்படுத்தினார்.

காதல், கற்பு முதலான கற்பிதங்களைத் தகர்த்தெறிந்தார்.

ஒரு தாராளவாதியாக, தேசத்துரோகியாக, மொழிப் பற்றை விட்டவராக, சிலை உடைப்பாளராக, எதிர்க் கலாச்சார வாதியாக, எல்லாவிதமான பற்றுகளுக்கும் எதிரியாய், சுய உறுதியாக்கத்தையே விடுதலை என்று உணர்ந்தவராய், மொழிந்தவராய்ப் பெரியாரை அனுகுதல் என்பது பெரியாரின் மறைக்கப்பட்ட பரிமாணங்களையும் மவுனமாக்கப்பட்ட சிந்தனைகளையும் மட்டுமின்றி இந்த நோக்கில் நிகழ்காலச் சூழலையும் விளங்கிக் கொள்ளப் பயன்படும். ❒



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு நாத்திகர், பார்ப்பன எதிர்ப்பாளர், தனிநாடு கோரியவர், பெண் விடுதலை பேசியவர் என்றுதான் பெரியாரின் பிம்பம் இங்கே கட்டி எழுப்பப்பட்டுள்ளது. ஒரு அரை நூற்றாண்டு காலம் தமிழ்ச் சூழலில் தீவிரமாக இயங்கிய பெரியாரின் சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் பின்னோக்கிப் பார்க்கும்போது அவர் அவ்வளவு எளிதாக மேற்குறித்த வரையறைகளுக்குள் சிறைப்படக் கூடியவரல்லர் என்பது வெளிப்படுகிறது. இந்த வரையறைகளின் பிடியில் அகப்படாமல் திமிறி வெளிப்படும் பெரியாரின் பரிமாணங்கள் மீது இக் குறு நூல் கவனத்தை ஈர்க்கிறது.

ISBN 81 7720 005 4

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்